Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 4. அத்தியாயம் 21.

நான் பீனிக்ஸில் பண்ணையை ஆரம்பித்தபோதிலும், நான் அங்கு இடையிடையே சில காலமே தங்க நேர்ந்ததுதான் மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். எனது வக்கீல் தொழிலை அடியோடு விட்டுவிட்டு பீனிக்ஸிற்குச் சென்று சரீர உழைப்பால் ஜீவனோபாயத்தை நடத்துவதோடு பண்ணையையும் வெற்றியோடு நடத்திவைக்க வேண்டுமென்பதுதான் எனது முக்கிய நோக்கம். ஆனால் அந்நோக்கந்தான் நிறைவேறாது போய்விட்டது. மனிதன் தனது வாழ்க்கையின் சம்பந்தமாகப் பல திட்டங்களை அமைக்க யோசித்துக்கொண்டே போகிறான். ஆனால் எல்லாம் அவன் இஷ்டப்படியே நடந்துவிடாதபடி கடவுள் மாற்றிக்கொண்டே வருகிறார். இது எனது அனுபவத்தில் கண்ட விஷயம். ஆனால் உண்மையைப் பின்பிற்றிச் செல்லும் விஷயத்தில் திட்டத்தில் மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும், எதிர்பார்ப்பதைவிட நிலைமை ஒழுங்காகவே முடிவடையும் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். பீனிக்ஸில் அவ்வித மாறுதல் ஏற்படுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராத விஷயங்களும் சில நடந்தன. ஆனால் நாங்கள் நம்பியபடி நன்மை ஏற்பட்டதென்று கூற முடியாவிடினும், அதிகத் தீமையேற் பட்டுவிடவில்லை.

ஒவ்வொருவரும் சரீர உழைப்பாலேயே வாழ்க்கையை நடத்த சௌகரியம் ஏற்படவேண்டுமென்பதை முன்னிட்டு, விவசாயம் செய்வதற்காகத் தலைக்கு மூன்று ஏக்கர் நிலத்தை சமமாகப் பிரித்துக்கொண்டோம். அதில் ஒரு பாகம் எனக்குக் கிடைத்தது. எங்களுடைய எண்ணத்திற்கு நேர் விரோதமாக நாங்கள் இரும்புத் தகடுகளைக்கொண்டே அந்த வீடுகளைக் கட்ட நேர்ந்தது. மண் சுவர்களை வைத்து வைக்கோல் வேய்ந்த கூரை வீடுகளைக் கட்டிக்கொண்டு அதில் வசிக்க வேண்டுமென்பதே எங்களுடைய எண்ணம். அந்த எண்ணத்தின்படியே நாங்கள் வீடுகளைக் கட்ட நேர்ந்திருந்தால் அதிக காலதாமதமேற்பட்டிருப்பதோடு அதிகச் செலவுமாகி யிருக்கும். மேலும் நாங்கள் சீக்கிரம் வீடுகளைக் கட்டிக்கொண்டு குடியேறிவிட வேண்டுமென்று அதிக ஆவல்கொண்டிருந்தோம்.

ஸ்ரீ மன் சுக்லால் காஜார் தான் அச்சமயத்திலும் பத்திரிகாசிரியராயிருந்தார். இப் புதிய திட்டத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, அவர் தர்பானிலிருந்த "இந்தியன் ஒப்பினியன்" ஆபீஸ் காரியாலயத்தில் இருந்துவந்தார். நாங்கள் பத்திரிகைக்கு அச்சுக் கோர்ப்பவர்களை சம்பளம் கொடுத்தே அச்சமயமும் வைத்திருந்தோம். பண்ணையில் வசித்து வந்த ஒவ்வொருவரும் அச்சுக் கோர்க்கப் பழகியிருக்கவேண்டுமென எண்ணம் உதித்தது. உடனே இதற்கு முன்பு தெரியாதவர்களும் கற்றுக்கொள்ள ஆரம்பித்தனர்.

### ஆவலுக்கு எதிரான மாறுதல்.

இதில் நான் கடைசிவரையில் மக்காகவே யிருந்தேன். வேலையை அதி தீவிரமாகக் கற்றுக்கொண்டு சிறந்து விளங்கியவன் மகன்லால் காந்திதான். அவன் அதற்கு முன் எந்த அச்சுக்கூடத்திலும் பயிற்சிபெறாதவனாயிருந்தும், அவன் அச்சுக் கோர்ப்பதில் அதிக சமர்த்தனானான். மற்றவர்களை விட அவன் அதிகவேகமாகக் கோர்த்து வந்ததோடு, அச்சுக்கூடத்தின் மற்ற வேலைகளிலும் மிகுந்த அனுபவம் பெற்றுவிட்டான். இதைக் கண்ட எனக்கு உண்மையில் ஆச்சரியமே உண்டாயிற்று. அவனுக்குள்ள திறமை அவனுக்குத் தெரியாதென்பதே என்னுடைய அபிப்பிராயம். வீடுகள் சரியாகக் கட்டிக்கூட முடியவில்லை; நாங்கள் சரியாகக் குடியேறி விடவில்லை; நான் புதிதாகக்கட்டிய என்னுடைய குடிசைக்குப் போகத் தயாராக இருந்த சமயத்தில் நான் ஜோகான்ஸ் பர்க்கிற்குப் போக நேர்ந்தது. அங்கு நடக்கவேண்டிய வேலைகளை நான் கவனிக்கவேண்டி நேர்ந்துவிட்டது. ஜோகான்ஸ் பர்க்கிற்குத் திரும்புகையில் ஸ்ரீ போலக்கைக் கண்டு நான் செய்துள்ள முக்கிய மாறுதல்களைப் பற்றிக் கூறினேன். அவருடைய புத்தகத்தை எனக்குக் கடனாகக் கொடுத்ததால் ஏற்பட்ட கணக்கற்ற நன்மைகளை யறிந்ததும் அவருக்குண்டான சந்தோஷத்திற்கோ அளவேயில்லை. "இப்புதிய துறையில் ஈடுபட எனக்கும் சாத்தியப்படுமல்லவா?" என்றுகேட்டார். "கட்டாயம் சாத்தியப்படு" மென்று பதிலளித்தேன். இஷ்டமிருந்தால் எங்கள் பண்ணையிலும் அவர் சேர்ந்து கொள்ளலாமென்று கூறினேன். "என்னை நீங்கள் சேர்த்துக் கொள்வதாயிருந்தால் நான் தயாராகவே இருக்கிறேன்" என்றார்.

அவருடைய திடமான முடிவு என் மனதைக் கவர்ந்தது, ஒரு மாத தவணையில் அவர் "கிரிடிக்" பத்திரிகையின் நிர்வாகிகளுக்கு நோட்டீஸ் கொடுத்து வேலையினின்றும் நீங்கிக்கொண்டு தான் கூறியபடியே பீனிக்ஸிற்கு வந்துசேர்ந்தார். அவர் எல்லோரிடத்திலும் ஒரேமாதிரி எவ்வித வித்தியாசமுமின்றி நடந்துகொண்டதால் அவரிடம் யாவரும் பிரியங்கொள்ளவாரம்பித்தனர். எனவே சீக்கிரத்தில் அவர் எங்கள் குடும்பத்தில் ஒரு அங்கத்தினராகவும் ஆகிவிட்டார். எளிய வாழ்க்கை நடத்துவதில் அவருக்கு மிகுந்த விருப்பமுண்டாகையால் பீனிக்ஸில் அவருக்கு எவ்வித கஷ்டமுமே தோன்றவில்லை. ஒரு மீனைத் தண்ணீரில் விட்டால் அது எவ்வளவு சந்தோஷமாக வசிக்குமோ அதைப்போலவே அவர் பீனிக்ஸில் சந்தோஷமாக வசித்துவந்தார். ஆனால் அவரை அங்கேயே நான் நீண்டகாலம் வைத்துக்கொள்ள முடியவில்லை. ஸ்ரீ ரிட்ச் சட்ட சம்பந்தமாக இங்கிலாந்து சென்ற படிப்பதென்று முடிவு செய்துகொண்டார். ஆகையால் நான் மாத்திரம் தனியாக இருந்துகொண்டு எனது காரியாலய வேலைகளை கவனித்துக் கொள்ள முடியவில்லை. எனவே எனது காரியாலயத்தில் சேர்ந்து வேலைசெய்து வக்கீல் தொழிலில் தேர்ச்சி பெறும்படி ஸ்ரீ போலாக்கிற்கு யோசனை கூறினேன். இருவரும் தொழிலை விட்டு பீனிக்ஸிற்குச் சென்றுவிடுவதென்றே யோசித்திருந்தேன். ஆனால் அதுதான் முடியாததாகிவிட்டது. போலாக் அதிக நம்பிக்கையான சுபாவமுடையவர். ஆகையால் நண்பரொருவர் அவருடைய அபிப்பிராயத்திலிருந்து மாறுபட்டு திரும்பிவிடுவாராகில், அவரோடு வீண் விவாதங்கள் செய்துகொண்டிருப்பதை விட நண்பருடைய அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டு விடுவதே மேலெனக் கருதி ஒப்புக்கொண்டுவிடுவார். அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது:— "பீனிக்ஸில் வாழ்வதில் எனக்கு அதிக திருப்தியே ஏற்பட்டிருக்கிறது. மேலும் நான் இங்கு சந்தோஷமாகவே வசித்துவருகிறேன். பண்ணையை விருத்திசெய்து விடலாமென்ற நம்பிக்கையு மிருக்கிறது. நமது கொள்கைகளை அங்கு சீக்கிரத்தில் நாம் உணர்ந்து கொள்ளக் கூடுமென்று நீங்கள் கருதுவீர்களாகில் நான் அங்கு வந்து உங்கள் காரியாலயத்தில் வேலைசெய்யத் தயாராக விருக்கிறேன்." நான் கடிதத்தை முழு மனதோடு வரவேற்றேன். அவர் பீனிக்ஸை விட்டுப்புறப்பட்டு ஜோகான்ஸ் பர்க்கிற்கு வந்து குமஸ்தாவாக அமர்ந்தார்.

நான் ஸ்காத்லாந்துக் காரராகிய ஒரு பிர்மஞான சபையைச் சேர்ந்தவரை உள்ளூரில் நடக்கும் சட்டப் பரீட்சைக்குப் போகப் பயிற்சிபெறும்படி வெகு காலமாகத் தூண்டிவந்தேன். ஸ்ரீ. போலாக் வந்து சேர்ந்த அதே சமயத்தில் அவரும் எனது காரியாலயத்திற்கு குமஸ்தாவாக வந்து சேர்ந்தார். அவருக்கு ஸ்ரீ. மாக்கின்டைர் என்று பெயர். எளிய வாழ்க்கையை நடத்தவேண்டுமென்பதற்காக பீனிக்ஸில் நான் பற்பல திட்டங்களை அமைத்து வந்ததுபோக பிறகு அதற்கு நேர் விரோதமானதோர் சுழற்சியில் நான் அதிகமாக ஆழ்ந்து கொண்டிருப்பதாகவே தோன்றிற்று. கடவுள் மாத்திரம் என்னைவேறு வழியில் திருப்பி யிராதிருந்தால் நான் எளிய வாழ்க்கை என்ற பெயரிலேயே கட்டுண்டிருப்பேன். ஆனால் நானும் எனது கொள்கையும். எவரும் எதிர்பாராவகையில் பிறகு காப்பாற்றப் பட்டோமென்பது உண்மை. ஆனால் அதைப் பற்றி விவரிப்பதற்கு முன்புவேறு விஷயங்களடங்கிய இரண்டொரு அத்தியாயங்களையும் கூற வேண்டியிருக்கிறது.

---

# பலதிரட்டு.

குளவிகளுக்கும், சிலந்திகளுக்கும் தேனீக்களுக்கும் இரண்டடி தூரத்திற்கு மேல் கண் தெரியாதாம்.

*　　*

ஜர்மனியிலுள்ள டேய்ஸ்பர்க் நகரில் முதன் முதலாக முற்றும் இரும்பினாலேயே கட்டப்பட்ட வீடொன்றிருக்கின்றதாம். அதற்கு மாடிப்படியில்லாததால் மேலேபோக ஏணி போட்டுத்தான் ஏறவேண்டுமாம்.

*　　*

டார் செஸ்டர் என்னுமிடத்தைச் சேர்ந்த போர்டிங்டன் கிராமவாசியான ஸ்ரீ. ஜி. மேல் என்பவரின் பெட்டைக் கோழிதான் உலகத்திலேயே மிகக்கிழமாம். இக்கோழி சமீபத்தில் அதன் 21 வயதில் இறந்து போயிற்றாம். இதற்கு முன்னிருந்த மற்றொரு கோழிக்கு வயது 19 தானாம்.

*　　*

மின்சார சக்தி மூலமாக மீன் பிடிக்கும் முறை ஹாலாந்தில் சோதிக்கப்படுகின்றது. இம்முறையின் கீழ் வேண்டிய தூரத்திற்குத் தண்ணீரில் மின்சார சக்தியைச் செலுத்திவிடுவதால் அப்பாகத்திலுள்ள மீன்களெல்லாம் பிரமித்துப்போய் நீர் மட்டத்தில் மிதந்துவிடுமாம்.

*　　*

மேனாடுகளில் வீடுகளில் திருடிவரும் திருடர்களைக் கண்டுபிடிக்கப் பல நூதன முறைகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. ஒரு அறைக்குள் திருடன் வந்த உடனே இரவோ பகலோ எந்த நேரமாயினும் அவனுடைய உருவத்தைப் படம்பிடித்துவிடத்தக்க கம்பியில்லா தந்தி சக்திவாய்ந்த படம் பிடிக்கும் காமிரா உபயோகிக்கப் பட்டிருக்கின்றது. அறையின் ஒரு பக்கத்தில் காமிராவும் மற்றொரு பக்கத்தில் யாருக்கும்காணாத சிறுமின்சாரவிளக்கும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்விரு வஸ்துக்களுக்குமிடையே யார் வந்தாலும் அவருடைய உருவத்தை காமிரா படமெடுத்து விடுகின்றது. அந்த மின்சார விளக்கை அப்புறப்படுத்த முயன்றாலும் காமிரா படம் பிடித்து விடுகிறது. இந்நுண்ணிய காமிராவில் 160 படங்கள் எடுக்க வசதியாயிருக்கின்றது. இக்காமிரா யாருக்கும் தெரியாமல் மறைத்துவைக்கப் பட்டிருக்கின்றது.

*　　*

ஒரு குலத்துக்கு ஒரு நீதி சொல்லும் மநு நீதி சாஸ்திரத்தை அரசாங்கத்தார் பறிமுதல் செய்து சுட்டுக் கொளுத்திவிட வேண்டுமென்று பிரம்மா புரம் ஆதி திராவிடர் மகாநாட்டில் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள்.

*　　*

தென் ஆப்பிரிக்காவில் இந்தியரது கல்வி வளர்ச்சிக்காக நேட்டாவில் ஒரு கல்லூரி ஏற்படுத்துமாறு ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் முயற்சிசெய்து வருகிறார். அதற்கு இதுவரை 15000 பவுன் சேர்ந்திருக்கிறது. இன்னும் ஐயாயிரம் பவுன் விரைவில் சேர்ந்துவிடுமாம்.

*　　*

டில்லியில் சுவாமி சிரத்தானந்தரைச் சுட்டுக்கொன்று மரண தண்டனையடைந்த அப்துல் ரசீதின் வழக்கை பிரிவுகவுன்ஸிலில் தள்ளிவிட்டார்கள். மரணதண்டனை உறுதியாயிற்று. அப்துல் ரசீதை டில்லிக் கடுத்த ஒரு இடத்தில் தூக்கிவிடுவார்கள்.

---

# செயற்கைச் சூரியன்.

இலங்கையைப் போன்ற உஷ்ண தேசங்களிலும் சில மாதங்களில் சூரியன் சரியாகக் காய்கிறதில்லை. இதனால் தேயிலைகள் வாடி உலர்வதற்கேற்ற சூரிய வெப்பம் கிடைக்க முடியாதாகையால் தேயிலை பயிரிடும் தோட்டக்காரர்கள் பெரிதும் சங்கடப்படுகின்றனர். முக்கியமாக மாரிக்காலங்களிலும், பனிக்காலங்களிலும் சூரிய வெப்பம் தேவையான அளவுக்கு இருக்க முடியாதாகையால் தேயிலைத் தோட்டக்காரர்கள் வானம் பார்த்து ஏமாற வேண்டியதாகத் தானிருக்கின்றது. இத்தொல்லையை ஒழிக்கும் வழி என்ன? இயற்கைச் சூரியனிடமிருந்து கிடைக்கும் உஷ்ணத்தை செயற்கையினால் பெற முடியுமா? இக்கேள்வி இங்கிலாந்திலுள்ள பல சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்களின் மனதிலும், கீழ் நாட்டுத் தேயிலைத் தோட்டக்காரர்களின் மனதிலும் பல காலத்திலும் தோன்றியதுண்டு. முடிவில் இப்பெரும் சங்கடத்தை பிரிட்டிஷ் சாஸ்திர எஞ்ஜினியர்கள் தம் திறமையினால் எளிதில் முடிவு செய்தனர். எஞ்ஜினீர்கள் சிலர் சேர்ந்து செயற்கைச் சூரியன் ஒன்றை நிர்மாணித்திருக்கின்றனர். இத்தகைய சூரியன்கள் பலவற்றையும் அவர்கள் சிருஷ்டிக்கக்கூடும். இச்சூரியன் இயற்கைச் சூரியனின் வேலையாகிய ஒளியையும் உஷ்ணத்தையும் கொடுப்பதால் இதற்குச் செயற்கைச் சூரியன் என்று பெயரிடப்பட்டது. இச்சூரியன் 50 அடி நீளமும் முப்பது டன்கள் கனமுமுள்ள பெரிய தோர் இயந்திரந்தான். இச் செயற்கைச் சூரியனை சமீபத்தில் தான் இங்கிலாந்திலிருந்து இலங்கைத் தேயிலைத் தோட்டங்களுக்குக் கப்பலேற்றி அனுப்பி யிருக்கின்றனர். இயற்கையாக சூரிய வெப்பத்தைக்கொண்டு தேயிலை வாடி உலர்வது போன்றே இவ்வியந்திரத்திலிருந்து வெளிப்படும் உஷ்ணத்தாலும் தேயிலை வாடி உலர்வதற்கேற்ற வசதி செய்யப்பட்டிருக்கின்றது. இச்செயற்கைச் சூரியன் கடல் மட்டத்திற்கு 6000 அடி உயரத்தில் இலங்கையிலுள்ள பல தேயிலைத் தோட்டங்களுக்கு மத்தியில் ஸ்தாபிக்கப்படும். இச்சூரியனுதவிபெற்ற பின் தேயிலைத் தோட்டக்காரர்கள் தம் தொழில் சம்பந்தப்பட்ட மட்டில் இயற்கைச் சூரியனைக் கவனிக்கவேண்டிய அவசியமேயில்லை. சாதாரணமாக சீதோஷ்ண நிலைமை எவ்வாறிருந்தாலும் அதைக் குறித்து அவர்கள் ஒரு சிறிதும் கவலைப்பட இனிக் காரணமில்லை. இயற்கைச் சூரியனைவிட செயற்கைச் சூரியனால் தேயிலைத் தோட்டக்காரர்களுக்குப் பின்னும் சில முக்கியமான நன்மைகளும் சாதகங்களுமுண்டு. இயற்கைச் சூரியன் வெப்பத்தில் தேயிலையை வாட்டி உலர்த்துவதற்குக் குறைந்தது 20-மணி நேரம் பிடிக்கின்றதாம். ஆனால் செயற்கைச் சூரியனாலோ வெனின் முப்பது நிமிஷங்களில் அதாவது அரைமணி நேரத்தில் தேயிலையை வாட்டி இயற்கைச் சூரிய வெப்பத்தில் உலர்த்துவது போலவே உலர்த்தித் தயாராக்கப்பட்டு விடுகின்றதாம். இதனால் தேயிலைத் தோட்டக்காரர்களுக்குச் சீதோஷ்ண நிலையின் மாறுதல்களாலேற்படும் சங்கடங்கள் ஒழிவதுடன், சிக்கனமும் துரிதத்தில் வேலை நடப்பதென்ற பல நன்மைகளுமிருக்கின்றன. இவ்வாறு செயற்கைச்சூரிய வெப்பத்தில் வாட்டி உலர்த்திய தேயிலை இயற்கையான வெப்பத்தில் உலர்த்துவதைப் போல மணத்திலும், குணத்திலும் சமமாக விருக்கின்றதாம். இதனால் இலங்கைத் தேயிலைத் தோட்டக்காரர்கள் கவலையின்றி உலக தேவைக்கேற்ற அளவுக்குத் தேயிலை சப்ளை செய்யக்கூடுமென்ற நம்பிக்கையுடனும் பேருக்கத்துடனும் வேலை நடத்தி வருகின்றனர்.

---

**தவறு ஒழிந்து, சுதந்திரமும், அன்பும், ஸத்யமும், சரியானதும் மேலுலகில் இருப்பது போலவே இங்கும் இருக்கக் கூடிய நாள் சீக்கிரம் உதிக்கட்டுமாக.**

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## பொழுது போக்கு.

(பொய்யில்லான் மொழிந்தது.)

நம் நாடெங்கணும் ஓர் பேரிரைச்சல் கேட்டுக்கொண்டிருக்கிறது. நிதானித்துக் கவனித்தால் குறைபாடுகள் நிறைபாடுற்ற சப்தமாய்க் கேட்கிறது. ஐயோ! எழுமக்கள் வயிற்றிக்கின்றி வாய்விட்டலறுகின்றனரே; தொழிலின்றி துன்பப்படுகின்றனரே; இந்தியப் பொக்கிஷம் இவர்களுக்குதவாதா? ராணுவங்களுக்கா ராப்பகலாய் அள்ளிக்கட்ட வேண்டும்? அடிமைப் பாசமன்றோ பிணைத்திருக்கிறது! பிணைக்கப்பட்ட நாம் ஒன்றுபட்டு பலம் போட்டால் படீரென அற்றேடிவிடுமே! ஒன்று சேருங்கள் ஒன்று சேருங்கள் எனக் குறைகூவலாயிருக்கிறது. இது நின்று சந்தோஷ ஆர்ப்பரிப்பு கேட்பதென்று?

* *

கருணைப்படகோட்டி மகாத்மா காந்தி நம் மக்களைத் தம் ஆற்றல் படகிலேற்றி துன்பக்கடலினின்றும் இன்பக்கரைக்குக் கொண்டுவருகிறார். வருகையில் சூக்ஷி அலைகள் தோணியைக் கவிழ்க்கப் பார்க்கின்றன. தோணியிலிருப்பவர் சும்மாவிருக்கின்றார்களா? தொடாதே; அருகில் அமராதே; நீ சொல்வது சரியன்று; நான் செப்புவதுதான் ஒப்புமென பற்பலவித மனமாற்சல்லியங்களேற்பட்டுக் குழப்பஞ் செய்கிறார்கள். குழப்பத்தில் தோணி கவிழ்ந்துவிடப் பார்க்கிறது! மகாத்மாப் படகோட்டி சூக்ஷி அலைகளுக்கஞ்சாது தோணிக் குழப்பத்திற்கே யஞ்சி சண்டைபோடாதீர்கள்; சமாதானமாயிருங்கள்; இலதேல் ஆபத்து நேரும்; அதோ தெரிகிறது இன்பக்கரையென சமர்த்தாய்த் தோணியை ஓட்டிவருகிறார்.

* *

நம் தேயத்தலைவர்கள் தீண்டாமைப் பேயை விரட்ட, ஞானப்பிரம்பு கைக்கொண்டு பிரசங்க உடுக்குத் தட்டவும், ஆங்காங்கப்பேய் கொண்டவர்களெல்லாம் தாம் கொண்ட அளவுப்படி ஆட்டங்கொள்கிறார்கள். சில பேயாடிகள் பேயோட்டியினது உடுக்கை உடைத்தெறியலாமாவென நெருங்குகிறார்கள். ஆனால் கையிலிருக்கும் ஞானப்பிரம்பைக் கண்டு நடுங்குகிறார்கள்! சிலர் சொன்னதைக் கேட்கிறோமென்றாடுகிறார்கள். சிலர் ஒன்றுஞ் சொல்லாமலாடிக் கொண்டிருக்கிறார்கள். சிலருக்கு உடுக்குச் சத்தம் கேட்டவுடன் பேயோடிவிட்டது. இன்னும் சிறிது காலத்திற்குள் ஸ்பஷ்டமாய் அப்பேய் விலகப் பெறுவார்கள். அந்தப் பேயும் இந்துமகா சமுத்திரத்தில் மூழ்கிவிடும்.

* *

பிராமணீயச் சகடம் இனி உருளாதென பேர்போன சுயமரியாதைத் தச்சர் ஒருவர் சொல்கிறாராகையால் தச்சருக்குத்தானே தெரியும் சகடக்கோளாறு என அதை உறுதியாய் நம்பியிருத்தல் வேண்டும்.

* *

பொதுக் குளங்கள் கிணறுகளில் ஸ்நானபானஞ் செய்யக்கூடாதென ஒதுக்கிவைக்கப் பட்டிருப்பவர்கள் சமத்துவத் தார் படவே, ஒரு சொட்டு ஜலத்திற்குப் பல சொட்டு ரத்தம் வடிப்போமென எழுந்திருக்க மகாத்மாவின் சாத்வீகப்போராட்ட ஆக்ஞை தடுத்திருத்திவிட்டது.

* *

நம் நாட்டில் கதரியக்க வெள்ளம் பரந்து வருவதுகண்டு அதன் மண் பறிந்தோர் அதில் வெள்ளிய மீனெனத் துள்ளிக் களிக்கின்றனர். மாண்பறியார்சிலர் மரம், மட்டைகளில் தாவுகிறார்கள்.

* *


சுயமரியாதைவீரர் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரை "சுதேசயம்" பத்திரிகை மாஜி 'மிளகாய் வியாபாரி' யென்று சுட்டி அவ்வியாபாரக்காரணமாய் நாயக்கர் தேச ஞானம் கொண்டவராக மாட்டாரெனும் பான்மையில் கவில்கிறது. ஈதென்னபேதமை! ஒருவர் ஒரு காலத்தில் வியாபாரியாயிருந்திருக்கலாம்; தொழிலாளியாயிருந்திருக்கலாம்; வேறு எவ்வகைத்தும் ஜீவனஞ்செய்து வந்திருக்கலாம். பின்பு அவர் தமது ஆற்றல் மிகுதியால் நல்லவராலும் வல்லரெனக் கொண்டாடப்படுகிற நிலைமை யெய்துவது கூடாதா? நாயக்கர் செய்துவரும் தேசத்தொண்டில் குறைகண்டு கண்டிப்பதாகப் புறப்பட்ட "சுதேசயம்" 'மிளகாய் வியாபாரி' என எளனம் காட்டுவது எள்ளித் தள்ளுவதற்குரித்தாம். அன்றி மிளகாய் வியாபாரத்தில் கேவலமெதுவும் உண்டென அபிப்பிராயமா? ஒரு காலத்தில் ஒரு படியிலிருந்து விர்த்திமுகங் கொண்ட பின்னர் தானே மறுபடியேறவேண்டும்? அப்படிக்கின்றி கொர்ப்ப உபதேசம் பெற்று தேச சேவகனாகப் பிறந்துவிட்டாராரேனும் உண்டா எனக் கேள்விகள் கிளம்பினால் "சுதேசயம்" என்ன சொல்லும்? இவற்றையெல்லாம் உணர்ந்திருப்பின் 'மிளகாய் வியாபாரி' யென எள்ளத் துணிந்திருக்கமாட்டாது.

* *

வீரர் பொலிந்திருந்த பாரத நாட்டின்கண் தற்போதிய மக்களின் வலிகுன்றிவிட்டது பிரத்தியட்சம். எங்கே இவர்களின் துதிக்கை போன்ற கரங்கள்? எங்கே இவர்களின் கற்பாறைபோன்ற மார்புகள்? எங்கே இவர்களின் மலையொத்தபுயங்கள்? அந்தோ! நானாவர்த்தியில் நலிந்து விட்டார்கள். யாரை நொந்தென்ன? நம்மையே நொந்து கொள்ளவேண்டியதுதான். இந்நலிவிற்கு முதற்காரணம் பால்யவிவாகமே யெனப் பகரலாம். பால்யவிவாகம் பரிதாபம்! ஆசைக்கல்யாணம்—செல்வத்திருமணம்—கண் குளிரக்காக்ஷியெனப் பேதைப்பெற்றோர்கள் பிள்ளைகளைக் கொல்லும் நமனாகிறார்கள். இத்தியாதியோரைச் சீர்படுத்திக்கொண்டாலும், இன்னொரு வழக்கம் எனும் இருட்டறையில் கிடக்கும் சாராரைத் திருத்துவதன்றோ கஷ்ட காரியமாயிருக்கிறது. இதுபற்றி எத்தனை கட்டுகள்! கொஞ்சமாவது அஞ்சினாரில்லையே. சின்னஞ் சிறுவயதிலேயே சிற்றின்ப வாய்ப்பட்டுழன்று, தேகம் மெலிந்து, தேஜஸ்இழந்து, வீரங்குறைந்து விருத்தாப்பிய வினைஞனாகி தன்மட்டே கெட்ட தோடல்லாமல், தக்க பருவத்தில் உற்பத்தியாகக் குழந்தையீன்றதன் பயனுய் அக்குழந்தையும் உறுப்புர மற்ற உடலுடன் வளர்ந்து பால்யமடையவும் பாழுங்கிடுங்காம் பால்ய விவாகத்தில் தள்ளப்படுகிறது. இப்படியே காலஞ்சென்றால் வீரர்கள் எங்கே யென்றுவது கேட்க நியாயமுண்டா? வேண்டாம் வேண்டாம் வினைசூழ்ந்த பால்ய விவாகம் வேண்டாம்.

* *

கோயில் என்பது கடவுள் இருப்பிடமாகக் கட்டப்பட்டதால் பரிசுத்தவிடமாகும். கோயிலில் தான் கடவுளிருக்கிறார் எனக் கொள்ளவேண்டுமென்பதில்லை. அவர் எங்கும் அந்தர்யாமியாய் விளங்குபவர். ஆனால் தேவனை—பரிசுத்த ஆவியைப் பணிவதற்குப் பரிசுத்த இடமே சாலத்தகுமாகையால் கோவிலையே இறைவன் குடியிருப்பாகக் கொள்ளவேண்டும். ஆகவே அத்தலத்தே பரிசுத்தவிக்கினமின்றி சர்வ சாக்கிரதையுடன்காரியாதிகள்நடைபெறல்ஒழுங்கு. தற்போதோ பல ஆலயங்கள் தேவதாசிகளால் நிறையப்பெற்று காமுகர் குழாங்கள் பெருகப்பெற்று வேசைகள் இல்லங்களாகவே விளக்கமாயிருக்கின்றன. இது சர்வ சாதாரணமாகி பொதுவாகக் கோயில்கள் காதலர் சந்திப்புக் கேது கரமாய்ப் போய்விட்டது. இத்தகைய கோயில்களில் தெய்வங் குடிகொண்டிருக்குமா? இருக்கவும் நியதியுண்டா? தாசியில்லங்களாகிவிட்டனவே யென்று மகாத்மாகாந்தி வச்சிராயுதப் பேச்சு கொண்டடிக்கிறார். இத்தகைய கோயில்களில் ஒட்டிக் கொண்டிருக்கும்சிலர் ஆத்திரம் பொறுக்க மாட்டாமல் ஏதேதோ அவர்களுக்குத் தகுந்த ஒப்பத்தகாத நியாயங்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு நல்ல காரியத்திற்கும் இடறுகட்டை இல்லாமற் போகவில்லை. தேவாலயம் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்றால் அதற்கொரு மறுப்பு! மடைவாயில் செத்தை யடைத்தது போலாம் இவர்கள் செய்கை. ஞானக்கோல்கொண்டு செத்தையை ஒதுக்கிவிட்டால் திருத்த நீரோட்டம் தேக்கமின்றியோடும்.



பொறையாறு

ஸ்ரீமான் வெ. கனகசபை நாடாரவர்கள்,

மதுரை, நாடார் மகாஜன சங்கத் தலைவர்.

## தீபாவளிப் பண்டிகையில் கதர்மணம்.

(கே. எஸ். அருணகிரிநாடார் எழுதுகிறார்.)

நட்டாத்தி பண்ணை நாடார் குலத்தினர்க்குள் ஒயாதி வாய்த்த ஜமீன் என்பது யாவரும் அறிந்த விஷயம். அஜ்ஜமீன் "தர்மம்" அரணால் சூழப்பெற்று தெய்வ கடாக்ஷ மென்னும் சக்தியால் நாளுக்கு நாள் அபிவிருத்தியுடன் ஆளப்பெற்று வருகின்றது.

இவ்வருடம் நடைபெற்ற தீபாவளிப் பண்டிகையின்போது நான் அங்கிருந்தேன். ஜமீன் சொந்தச் செலவுக்கும் வேலை ஆட்கள் செலவுக்குமாக சுமார் ரூபாய் 500-க்கு மேல் ஜவுளிச் செலவு செய்யப்பட்டது. அவ்விதஞ் செலவு செய்யப்பட்ட ஜவுளி பூராவும் சுத்தக் "கதர்" ஆகவே இருந்தது. அன்று தினம் மகாத்மா காந்தியடிகளின் உருவப்படத்திற்குக் கதர் நூல்மாலைகளால் அலங்காரஞ்செய்து தீப தூபங்காட்டி அடிகளின் பெயரில் பக்திரஸக் கீர்த்தனைகள் பாடி மிக்க வைபவத்துடன் பண்டிகை நடந்தேறியது புகழத்தக்கது.

அறிவாளிகளே! நமது தேசாபிமானம் பேச்சளவிலும் எழுத்தளவிலுமாக இருந்து விடாது நமது குலதிலகராகிய கனம் பண்ணையாரவர்கள் அனுஷ்டானத்தில் காட்டியபடி தேசாபிமானத்தைக் கருதி நம்மவர் எல்லோரும் கதரையே கையாள வேண்டுமாய் வேண்டுகிறேன்.

## நல்லொழுக்கம்.

வான் புவி பாதலமாகிய மூவுலங்களையும்ஆக்கல், அளித்தல், அழித்தலென்னும் முத்தொழில் புரிந்து நடாத்தும் தன்வயத்தனான, முதலும் முடிவுமில்லா முழுமுதற்கடவுள், ஐம்பூதியங்களா லண்டகோள முதலிய அசரப் பொருள்களை ஆக்கியபின் ஒரு தேர்ந்த கணக்கன்தான் விரிவாய்ச் செய்த கணக்கை முடித்து, ஒரே வரியில் விடை எழுதுமாறு, பஞ்ச பூதியங்களை யொருங்கே யழைத்துத் தமது சித்தாகிய அறிவான்மாவையும், கிஞ்சித்துச் சேர்த்து மனிதனைப்படைத்து தோன்றிய சகல உலகப்பொருட்களுக்கு முரியனாக்கி, நல்வழியிலொழுகித் தம்மையடைய வப் பொருட்களையுதவி, ஈற்றில் தம்மையே நுகர்ந்தனுபவிக்க மோட்ச சாம்பிராச்சியத்திற்கு மவனை அருகனாக்கினர்.

சர்வ வல்லபரான அக்கடவுளே சுத்த சடப்பொருட்களுக்கு சடத்துவ ஒழுங்குகளை உண்டாக்க ஆகாயத்தில் கண்டதிசயிக்கும் சூரிய சந்திராதி கிரணங்கள் தத்தம் இடம் மாறாதியங்கி, தாம் எவைகளுக்காக உண்டாக்கப்பட்டனவோ அவைகளைச் சரிவர ஒழுங்காய் நிறைவேற்றுகின்றன. இரா, பகல், சீதோஷ்ணம், கால வேற்றுமை முதலியன இடையறு ஒழுங்காய் ஒரே நேர்மையாய் மாறி மாறி நிகழ்கின்றன. மேற்காட்டிய சடப் பொருட்களின் ஒழுங்குப்படி முறையே நடத்தும் கடவுள் பகுத்தறிவுள்ள சித்துப் பொருட்களாகிய மனிதர்களுக்குத் தம்முடைய ஒரே பொதுவழியை ஏற்படுத்தியுள்ளாரென்பதூஉம் திண்ணம். அவ்வழியை நாம் ஒவ்வொருவரும் அறிந்து நெறியோடொழுகி நற்கதி பெறநிற்றல் கடன். "ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க முயிரினு மோம்பப் படும்." (குறள்)

பி. நடராஜ்

சந்தையடியூர்.

மனிதன் திரேகத்திலுள்ள இரத்தத்தை யாதொரு கஷ்டமுமின்றி அளந்து கொள்ள சமீபத்தில் கண்டு பிடித்திருக்கிறார்களாம். இம்முறை கொண்டு பார்த்ததில் ஒவ்வொரு மனிதனின் கனத்தில் இருபதில் ஒரு பங்கு கனமுள்ள அளவு திரேகத்தில் இரத்தம் இருப்பதாகத் தெரியவருகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection





சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்போதும் மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தா வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பாமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

## நாடார்குலமித்திரன்

பிரபவ ஸ்ரீ அற்பிசி மீ உமட உ

---

## விபசாரம் ஒழிய வேண்டும்.

விபசாரம் ஒழியவேண்டும் என்பதாக நாட்டில் பெரியதோர் கிளர்ச்சி தோன்றி யிருக்கிறது. விபசாரம் விருத்தியாவதற்கு அடிப்படையாகவுள்ள கோவிலிற் பொட்டுக் கட்டும் வழக்கத்தை நிறுத்துவதற்காக டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் சென்னை சட்டசபையில் ஓர் தீர்மானங் கொண்டு வரப் போவதாகத் தெரியவருகிறது. எத்தனையோ வருடங்களாகச் சட்டசபைகளிருந்தும், ஜனப் பிரதிநிதிகளிருந்தும், புதுச் சீர்திருத்தம் வந்து ஆருண்டுகளாக பல வகுப்புப் பிரதிநிதிகளிருந்தும் இவ்விழி தொழிலைச் சட்ட மூலம் தடுத்துவிட ஒருவருக்காவது தைரிய முண்டாகாமற் போய் விட்டது. பெண்கள் திலகமாய் வந்த நமது டாக்டர் முத்துலட்சுமி அம்மாளவர்களுக்கே அவ்வுணர்ச்சி தோன்றி நம் நாட்டிற்கோர் மாசகற்ற வேண்டி மிகவுந் தைரியத்துடன் இத்தீர்மானத்தைக் கொண்டு வரப்போகிறார்கள் என்பதை யறிந்து பாராட்டுகின்றோம்.

மற்றெல்லா மாகாணத்திலும் அம்மையார் தீர்மானத்திற்குத் தக்க ஆதரவிருப்பதாகவே பத்திரிகைகள் வாயிலாகப் பார்க்கிறோம். ஆனால் நமது மாகாணத்திலோ திரு. துரைக்கண்ணு அம்மாள், திரு. பார்வதி அம்மாளென்ற இரண்டு தேவ தாசிகள் இத்தீர்மானத்தை நிறைவேற்றக் கூடாதென்று அதற்கு வேண்டிய கிளர்ச்சி செய்து வருகின்றார்கள். அதற்கேற்றாற்போல் திரு. சத்தியமூர்த்தி ஐயரும் திரு. சாமி வெங்கிடாசலஞ் செட்டியார் வீட்டில் கூடிய தேவ தாசிகளின் கூட்டத்தில் தாளம் போட்டிருக்கிருர். இன்று கோயில்களில் பெண்களைப் பொட்டுக் கட்டும் வழக்கத்தைச் சட்டத்தால் தடுத்து விட்டால் நாளை திரு. நாயக்கர், நாயுடு கோருகிறபடி கோயில்களின் பிராமணப் புரோகிதரை நீக்கிவிட வேணுமென்று ஓர் தடைச் சட்டம் வந்தாலும் வரக்கூடுமே என்று திரு. ஐயர் பயப்படுகிருர். "ஆனை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே" என்ற பழமொழிக் கிணங்க அடுத்த சீர்திருத்தச் சட்டசபையில் புரோகித பகிஷ்காரத் தீர்மானம் வந்தாலும் வரலாம். திரு. மூர்த்தியின் வியாக்யானத்துக்கு டாக்டர் அம்மாள் கூறிய பதிலாவது:—

"மதம் என்பதற்கு உண்மையான பொருளென்ன? ஒரு விஷயத்திற்கு மதம் சம்மதித்திருக்கிறதெனக் கூறுவதில் என்ன பயன்? மதத்தைப் பற்றி நீங்களென்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறீர்கள்? மதப் பெயரால் நம் நாட்டில் எத்தனையோ கொடுமைகள் நடக்கின்றன! ஒரு விஷயம் மத சம்மதம் பெற்றிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, மதப் பெயரால் ஏதாவது கொடுமை நடக்குமாகில் நாம் உடனே அதை ஒழிக்க வேண்டும். பொட்டுக் கட்டுதல் மத சம்மதம் பெற்றதென அவர்கள் சொல்வதாக நீங்கள் கூறுகிறீர்கள். குற்றவாளிகளுடைய அபிப்பிராயத்தைக் கேட்டுக் கொண்டா சீர்திருத்தம் செய்ய முன்வருபவர் நடப்பார்? மதுவிலக்கு விஷயமாக நாமொரு தீர்மானமோ, சீர்திருத்தமோ செய்யுமுன் குடிகாரர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்பதுண்டா? பொட்டுக் கட்டுதல் மத சம்மதம்; அதனால் அதை ஒழிக்கக் கூடாதெனக் கூறுவது பொருத்தமற்ற வாதமாகும். பொட்டுக் கட்டுதலென்னும் வழக்கத்தை அடியோடொழிக்க முன்வர வேண்டுமே யல்லாது அதற்குச் சமாதானங்கள் கூறிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. நம் சகோதரிகள் விபசாரமெனும் தீய தொழிலில் ஈடுபடக் கூடாதென்பதே என் முக்கிய கருத்தாகும்" என்பதே.

மத சம்பந்தமும், புராதன வழக்கமும், ஓர் வகுப்பார் கண்ணியமுள்ளதாகவும் நினைத்திருக்கிறதுமானபொட்டுக்கட்டும்வழக்கத்தை நிறுத்துவது பாவமென்று இரண்டு தாசிகளும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மதம் மதம் என்றே ஓர் மதங்கொண்ட ஜாதியார் நம் நாட்டை அடிமைத் தனத்துக்குள்ளாக்கி விட்டார்கள். அம்மதத்தைத் தொலைக்கத்தான் இப்போது தோன்றியிருக்கும் சுயமரியாதைக் கிளர்ச்சி யென்பதை தாசிகள் யோசிக்கவில்லை போலும்.

சமுசாரிகளிலும் விபசாரிகளில்லையா? சட்டத்தினுல் விபசார தாகந் தணிந்து விடுமா? என்று எழுப்பிய அத் தாசிகள் பிரசினைக்குத் "தமிழ் நாடு"ம், "திராவிட"னும், "நவசக்தி"யும் சரியான பதில் கொடுத்திருக்கின்றன. ஆகையால்நாமொன்றும் விசேஷித்துக் கூற வேண்டிய தவசியமில்லை.

நம் நாட்டுக்கு நலன் செய்ய அவதாரம் செய்ததாக நடிக்குந் தலைவர்களுக்கு இத்தகைய சமூக சீர்திருத்தமாகிய முக்கிய விஷயங்களைப் பார்க்கிலும் வேறென்ன வேலை யிருக்கிறது? இவ்வேலைகளைச் செய்து உபகாரம் செய்யாவிடினும் உபத்திரவமாவது செய்யாமலொதுங்கி யிருந்தாலென்ன? தீண்டாமை யொழிய வேண்டுமென்றால் மதங் கெட்டுப்போகும்; தேவஸ்தானத்தைத் திருத்தினால் மதங் கெட்டுப் போகும்; விபசார மொழிந்தால், மதங் கெட்டுப் போகும்; இவ்வாறு மதங் கெட்டுப் போகும், மதங் கெட்டுப் போகுமென்று ஒரு வகுப்பார் வயிறு வளர்க்க, மானங் கெட்ட பேச்சை நாம் காது கொடுத்துக் கேட்டு வாளாவிருக்கும் வரையும் நமக்கு விடுதலை கிடைக்கப்போவதில்லை. ஆகையால் டாக்டர் அம்மாள் கொண்டுவருந் தீர்மானம் திரு. சத்தியமூர்த்தி ஐயர் கூட்டத்தாருடைய பிழைப்புக்குப் பாதகமுண்டாகுமென்று பயந்து போகாமல் ஆதரவு காட்டி நிறைவேற்றி வைக்கும்படி தேச சமூகப் பிரதிநிதிகளனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் நின்றுவிடாமல் தீர்மானம் அமுலுக்கு வரவும், அத்தொழிலை பரம்பரையாகச் செய்து வந்த சமூகத்தார் பிழைப்புக்குரிய வேறு பல தொழில் ஸ்தாபனங்களை நாட்டில் உண்டாகச் செய்ய வேண்டிய வழிகளையும் திறந்துவிடப் பிரயாசைப் பட வேண்டும். துன் மார்க்கம் அறவே தொலைந்து நாட்டில் நன் மார்க்கம் நடைபெற வேண்டுமென்றால் ஆங்காங்கு சன் மார்க்கத்தை வளர்க்கும் போதனு நிலையங்கள் போதுமானவரை சிருஷ்டிக்க வேண்டும். ஆடவர்கள் உள்ள மெல்லாம் சன் மார்க்க வெள்ளம் ததும்ப வேண்டும். விபசாரம் ஒழிய வேண்டுமென்ற தீர்மானமல்ல; இன்னும் நல்ல தீர்மானங்களெல்லாவற்றையும் நிறைவேற்றிவிடலாம். எத்தனை மூர்த்திகள் வந்தெதிர்த்தாலும் ஜெயித்து விடலாம். விதியை அனுசரித்து நடப்பதன்றோ கடன்.

தீண்டாமையை விலக்க வேண்டுமென்றால், தேசம் சீர்திருந்த வேண்டுமென்றால, விபசாரம் ஒழிய வேண்டுமென்றால், களவு அகல வேண்டுமென்றால், கொலை நீங்க வேண்டுமென்றால், பொல்லாப் புரோகித மதம் சாக வேண்டுமென்றால், நாம் யார்; நாமெங்கிருந்து வந்தோம்; எங்கிருக்கின்றோம்; இனி எங்கு செல்வோம்; இங்கு செலுத்த வேண்டிய கடன் யாது என எல்லோரும் சிந்தித்தல் வேண்டும். என் கடன் பணி செய்து கிடப்பதே எனக் கொண்டால் அன்பு வாரிதியில் நீந்தி ஆனந்தக் கரை யேறி ஆண்டவனுடன் ஐக்ய முறலாம்.

---

## மதுவருமானம் போய்விட்டால்.

நமது இந்திய நாட்டின் துரதிஷ்டம் நல்லகாரியங்களை நடத்துவதற்கு கவர்ன்மெண்டின் கையில் பணமில்லாமல் போய்விடுகிறது. தவிரவும் தீயவழியில் வரும் சம்பாத்தியத்தால் கல்வியைப் பரப்பவேண்டியதாக முடிந்திருக்கிறது. இது இரட்டையாட்சியின் அலங்கோலங்களில் ஒன்று. ஏழைத் தொழிலாளி முதல் வக்கீல்கள் உத்தியோக வர்க்கத்தார்வரை இந்தியமதுவும், சாராயமும், அந்நிய நாட்டுத் தினுசுகளும் சாப்பிட ஆரம்பித்துவிட்டார்கள். இதனுல் இந்திய ஏழைக் குடும்பங்கள் படுங் கஷ்டம் இறைவனுக்குத்தான் தெரியும். ஏழைகளின் வறுமை தொலைந்து அவர்களும் ஒரு வேளையாவது வயிறாரச் சாப்பிடுவதற்காகவும், அவர்களும் சந்தோஷமான குடும்பங்களாகக் காலந்தள்ளவும் மதுவிலக்குத் தீர்மானங்கள் சட்டசபைகளில் வந்தால் மந்திரிகளும் நிர்வாகசபை மெம்பர்களும் கூடிப் பேசிக் கொண்டு மதுவருமானத்தாலேயே இந்தியர்களுக்கு கல்வி போதிக்க வசதிசெய்யப் பட்டிருக்கிறது; அந்த மதுவருமானம் போய் விட்டால் கல்விக்காகச் செலவிடப் பணமில்லையே; அதற்காக புதிய வரி விதிக்க ஜனங்கள் சம்மதப் படுவார்களா? பூரண மதுவிலக்கு சாத்தியமா? மது வருந்துவோரின் சுதந்திரத்துக்கு விரோதமாக கவர்ன்மெண்டார் தலையிடுவது நீதியா? எனப் பல கேள்விகளைப் போட்டு விடுகிருர்கள்.

இந்தியாவின் செல்வங்களை வடிகட்டுவதற்கான எத்தனையோ சட்டதிட்டங்களும் எவ்விதக் காரணமுஞ் சொல்லாமல் தேசாபிமானிகளைச் சிறை செய்துவைக்க புதிய புதிய சட்டங்களும் செய்வதில் இந்தியா கவர்ன்மெண்டாவது மாகாண கவர்ன்மெண்டுகளாவது சலிக்கிறதில்ல. அப்போது பொருளைப்பற்றிய விசாரமாவது, மனித சுதந்திரத்தைப் பற்றிய கவனமாவது அதிகார வர்க்கத்தின் மனதில் உண்டாகிறதில்லை. இந்தியர்களுக்கு ஏதாவது நன்மையான காரியங்களைச் செய்ய வேண்டுமென்னும் போதுதான் இத்தனை யோசனைகளும் வந்து முட்டுக் கட்டைபோட்டுக் கொள்ளுகின்றன.

பூரண மதுவிலக்கினுல் வருமானத்தையும் இழந்து திருட்டுத்தனமாய் மது வுற் பத்திசெய்பவர்களையும், அந்நியநாட்டிலிருந்து இரகசியமாய் மது இறக்குமதி செய்பவர்களையும் கண்டுபிடித்து தண்டிப்பதற்காக ஒரு இலாகாவையும் வைத்து நடத்துவதில் ஏற்படுஞ் செலவையும் ஈடுசெய்ய வேண்டியது அவசிய மென்பதை நாமும் ஒப்புக் கொள்கிறோம்.

அதற்காக நமக்குத் தோற்றும் யோசனை யென்னவென்றால் அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் துணிகளுக்கு 100—க்கு ரூ 50 வீதமும், உள்நாட்டு மில்களில் தயாராகும் துணிகளுக்கு 100—க்கு ரூ 25 வீதமும் வரி விதித்தால் அந்த வரியானது ஏழை முதல் பணக்காரன்வரை சகலரையும் கட்டுப்படுத்துவதாகும். அதன் மூலம் வசூலாகும் பணத்தை இந்தியா கவர்ன் மெண்டார் மாகாணவாரியாகப்பங்கிட்டுக் கொடுத்து கல்வியபிவிருத்தி செய்யலாம். இதை எல்லா நிலையிலுள்ள இந்தியர்களும் ஏற்றுக் கொள்வார்கள். தவிரவும் அதனுல் கதாபி விருத்திக்கும் ஒரு சாதகமுண்டாகும். நல்லவழியால்வரும் பணத்தைக் கொண்டு இந்தியர்களுக்குக் கல்வி கிடைப்பதால் இந்தியாக் கவர்ன்மெண்டின் பேரிலிருந்த ஒரு அபகீர்த்தியும் நீங்கும். இதை இந்தியசட்டசபை மெம்பர்களும், மாகாண சட்டசபை மெம்பர்களும் யோசனை செய்து மசோதா ரூபமாகவும் தீர்மான ரூபமாகவும் கொண்டுவந்து நிறைவேற்ற முயற்சியெடுப்பார்களா?

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## மகாத்மா காந்தியடிகளும் வருணச்சிரம தருமமும்.

மகாத்மா காந்தியடிகள் திருப்பூரில் சில பிராமணரல்லாத தலைவர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோது, எவ்வளவு கேவலமான தொழிலைச் செய்து நீமையான வழியில் நடந்து கொண்டிருந்தாலும், பிராமணன் பிராமணன் தான்; எத்தனை உயர்ந்த தத்துவங்களையுணர்ந்து அவ்ற்றின்படி நடந்தாலும் பறையன் பறையன்தான்; அடுத்த ஜென்மத்தில் தான் அதன் பலனைத் தாழ்ந்த குலத்திலும் உயர்ந்த குலத்திலும் பிறந்து முறையாக வருவார்கள் என்று சொல்லியதாக 25–10–27 "தமிழ்நாடு" பத்திரிகையில் வெளியாயிருக்கிறது. அவ்விதம் மகாத்மா சொல்லியிருப்பாராஞல் அதை மிகுந்த மனவருத்தத்தோடு ஆக்ஷேபிக்கிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தமிழர்களுக்குள் சைவ, வைணவ சமையங்களின் வழிபாடுகளே மிகுதியாயிருக்கின்றன. அவ்வழிபாட்டினைக் கைக்கொண்டு சைவ, வைணவ அடியார்கள் முத்தியடைந்த சரித்திரங்களில் நந்தனர், திருப்பாணழ்வார் போன்று பிராமணர்களால் பஞ்சமர்களென்று ஒதுக்கி வைக்கப்பட்டவர்களும், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று வருணப் பட்டங்கட்டப் பட்டவர்களும் முத்தியடைந்து அவர்களுக்குக் கோயில்களில் விக்கிரகங்களும் அமைத்து வணங்கிவருவதும் இன்றும் வழக்கத்திலிருந்து வருகிறது. அதற்குரிய புராண சரித்திரங்களும் இருக்கின்றன. பிரம்மாவின் முகத்திலிருந்து வந்ததாய்ச் சொல்லிக்கொள்ளுகிற பிராமணர்களும் அவைகளை ஒப்புக்கொண்டு வணங்கிவருகிறார்கள்.

அடியார்க்கெளிய திருச்சிற்றம்பலக் கூத்தனுகிய சிவபெருமான், பெத்தான் என்னும் பறையர் வகுப்பில் (பறையடித்தலால் பறையர் என்பது நூல் வழக்கு) பிறந்த பக்தருக்கு சிவதீக்ஷை செய்துவைத்து முத்தி நிலையைக்காட்டும்படி சந்தான குரவர்களிலொருவாகிய உமாபதி சிவாச்சாரியருக்கு,

அடியார்க்கெளியன் சிற்றம் பலவன் [கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச் சீட்டு—படி [மீதில்
பெத்தான் சாம்பானுக்குப் பேதமறத் [தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை

என்று எழுதிய திருக்காலிகிதமும் இராமாநுஜாச்சாரியர் சக்கிலியர், பறையர் முதலிய வகுப்பார்களுக்கு வைணவ சிந்தாந் தப்படி வைணவதீக்ஷை செய்து வைத்து அந்தணராக்கிய சரித்திரமும், விபூதி ருத்திராக்ஷதாரணஞ் செய்த சிவனடியார்களை சைவ சமயத்தாரும் தங்கள் புயங்களில் தீக்ஷாவிதிப்படி சங்கு சக்கரம் பொறித்து திருமண் சாத்தும் ஹரிபக்தர்களை வைணவ சமயத்தார்களும் எவ்வித சாதி பேதமுமில்லாமல் மதித்து நடந்து வருவதும் மகாத்மா காந்தியடிகளின் வருண தருமத்துக்குப் புறம்பாகவன்றோ முடியும்?

மகாத்மா சொல்லுகிற பகவத்கீதையோ அல்லது வேதமோ உபநிஷத்துக்களோ ஏதோ ஒன்று மகாத்மாவின் கொள்கையை உறுதிப்படுத்துமாஞல் ஒன்று தமிழர்களின் சைவ, வைணவ அடியார்கள் முத்தியடைந்த சரித்திரமும் பொய்யாய் தமிழர்களின் மதமும் வெறும் ஏமாற்று வேலையாயிருக்க வேண்டும்; அல்லது மகாத்மா அறிந்து கொள்ள வேண்டிய மத நுட்பங்கள் இன்னும் பல விருக்கவேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள் "தெய்வமென்பதோர் சித்த முண்டாகி, முனிவிலாத தோர் பொருளது கருதலும் ஆறுகோடி மாயாசத்திகள் வேறு வேறு தம்மாயைகள் தொடங்கின" என்று திருவாய் மலர்ந்தருளியபடி மாயாசத்திகள் அடிகளை மாயாவாதச் சுழலில் அமிழ்த்த முயற்சிக்கின்றதோ என்னவோ! யார் அறிவார்?

அடிகளின் தமிழ்நாட்டு விஜயமானது பிறப்பை ஆதாரமாய்க்கொண்ட வருணச்சிரம தருமத்துக்கு புத்துயிரளிக்க உபயோகப்படுத்தப்பட்டு விட்டது என்பது இந்தப்பதிலில் தெளிவாகி விட்டதால் பிராமணரல்லாத சகோதரர்கள் உடனே விழித்துக் கொண்டு தங்கள் சுயமரியாதையையும் சுயமதத்தையுங்காப்பாற்ற முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

சமதருமவாதி.

---

## இனியாவது பிடிவாதத்தை விடுவார்களா?

பம்பாயில் கோயில் குளங்களில் பிரவேசத்தடையொழிக்க சத்தியாக்கிரகம் நடத்தத் தீர்மானித்து விசேஷ பரபரப்பேற்பட்டிருக்கிறது. அநேக தொண்டர்கள் தைரியமாய் முன் வந்திருக்கின்றனர்; இதுவரை ரூ 500-0-0 வசூலாகி யிருக்கிறது. காரிய சித்திகணத்தில் கிடைக்கும் பான்மையில் இருக்கிறது. தடைக்குப்பையைக் கொழுத்த பம்பாய் நகரில் மூட்டியிருக்கும் தீயானது தென்னடும் பரவி ஆங்காங்குள்ள குப்பைகளை யெரித்து விடுவது திண்ணம். காற்றும் அனுகூலமாகத் தென்னேக்கித்தான் வீசுகிறது. கோயிற்பிரவேசத் தடையைப் பிடிவாதமாய்க் கொண்டுள்ளோர்கள் ஜெபம் இனிப்பலிக்காது. இவர்கள் தடையை நீக்கும்படி செய்யப்படுமுன் தாங்களே விட்டுக்கொடுத்தால் பெருமையாயிருக்கும். அப்பெருமைக் காணாகப் பார்ப்பதே உசிதம். தேசமிருக்கிற நிலையில் இவர்கள் சிந்தனை செலுத்தவேண்டும். விடாப்பிடியாயிருப்பதில் பயனின்று. பிறரால் விட்டுக் கொடுக்கும்படி செய்யப்பட்டு விடுமுன் நியாயமோர்ந்து யூகமாய் நடந்துகொள்வது நன்று. ஒருவர் சுதந்திரத்தை அநியாயமாய்க் கவர்ந்து கொண்டிருப்பது அடுக்குமா? வழக்கமெனக் கொண்டிருப்பின் காலதேச வர்த்தமானத்தை யோர்ந்து சமயோசிதமாய் நடந்துகொள்ளக் கூடாதா? அவ்வழக்கத்தை மீறுவது பாபகரமா? அன்றி தீண்டாமைக்கேதேனும் பிரம பூர்வமாய் ஆதாரமுண்டா? ஒழுக்கந்தவறியவன் தான் தீண்டப்படாதவன். மனிதரில் பிறப்பால் உயர்வு தாழ்வின்று என முடிவுகொண்டு தடை நீக்க மனமுவந்தால் போற்றற்குரியதாகும். கடைசி வரையிலும் பார்ப்போமென்றிருந்தால் பின் கை நெறித்துக்கொள்ள வேண்டியதுதான். பம்பாயிற் பெருக்குந் தீ தென்பாகத்திலும் சுவாலை விட்டெரியப் போகிறதாகையால் இனியாவது வைதீகர்கள் எனச் சொல்லிக் கொள்வோர் பிடிவாதத்தை விடுவார்களா வெனக்கேட்கிறோம்.

சுதந்திரவாதி.

---

## இராமநாதபுரம் ஜில்லாப் போர்டார் கவனிக்கவேண்டும்.

கனம் இராமநாதபுரம் ஜில்லாப் போர்டாரால் பொதுஜன நன்மையைக்கருதி, அருப்புக்கோட்டை, திருச்சுழி ரஸ்தாவிலிருந்து கல்லூருணி மார்க்கமாக சாயல்குடி (முதுகுளத்தூர் தாலுகா) வரை போடும் பப்ளிக்ரோட்டிற்கு கல்லூருணி கடைத்தெருவுக்குப் போடவேண்டிய மண் வெட்டுவதற்கு நிலம் வேண்டுமென்று கேட்கப்படுவது தெரிந்து, ஷை ரோடு இஞ்ஜினீயரவர்களிடம் கல்லூருணி, உறவின்முறை நாடார் தர்ம்பரிபாலன சங்கத்தார் தங்களுடைய கல்குளம் ஊருணியில் மண் வெட்டிக்கொள்ள வேணுமென்றும், அப்படி வெட்டிக் கொள்வதற்கு யாதொரு கிரயமும் வேண்டாமென்றும், ஜன சகாயத்தைப் பொறுத்து போர்டாரவர்கள் போடும் புதிய ரோடுக்கு வேண்டிய மண் வெட்டுவதிலிருந்து ஜன சகாயமாக அதிகத் தண்ணீர் யிடிக்கும் படி குளம் ஆழமாகுமென்றும் எடுத்துச்சொன்னர்கள்.

அது சரியானது என்று கனம் இஞ்ஜினீயரவர்கள் ஒப்புக்கொண்டு இரண்டு மூன்று நாட்கள் ஷை குளத்தில் மண் வெட்டும் நடந்தது.

பின் இவ்வூர் பிராமணர்களின் சொல்லைக்கொண்டோ நாடார்கள் குளம் என்ற துவேஷத்தைக்கொண்டோ அல்லது ரோட்டு சிப்பந்திகள் தங்களுக்கு ஏதும் லாபம் வேணுமென்பதைக் கொண்டோ ஷை கண்மாயில் மண் எடுப்பதை விட்டு, ஷை குளத்திற்குத் தென்புறம், ஷை குளத்தைப் பார்க்கிலும் மண் வெட்டுவதற்குக் கடினமான நிலமொன்றை நாற்பது ரூபாய்க்கிரயத்திற்கு வாங்கி அந்நிலத்தில் மண் வெட்டு நடந்து வருகிறது. தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உறையுமில்லை என்பது இவர்கள் விஷயத்தில் பலித்தது விந்தையே. மண் வெட்டும் கூலிகளுக்குக் கண்மாயில் வெட்டவே பிரியம். ஏனென்றால் மிகவும் லேசாக மண் எடுக்கப்படுகிறதென்று. ஆகவே, கனம் போர்டாரவர்கள் கவனித்து ஷை கண்மாயில் மண் வெட்டும்படி உத்தரவு செய்வார்களென்று நம்புகிறேன்.

ஆறுமுக நாடார்,
கல்லூருணி.

---

## செய்தித்திரட்டு.

பம்பாயின் வடபாகத்தில் ஒரு பட்டாணியக் கூட்டம் கைத்துப்பாக்கிகள் சகிதமாய் ஒரு கடையில் புகுந்து கொள்ளை கொண்டோடி விட்டார்கள். போலீஸாரும் ஜனங்களும் ஒன்றும் செயலியலாது பிரமித்துப் போயினர்.

* *

லண்டனில் ஒரு வாலிபத் தொழிலாளர் தமது 4-வயதுக் குழந்தை காசநோயால் வருந்துவதைச் சகிக்காது அக்குழந்தையை துன்ப விடுதலாகக் கொன்று விட்டாராம். நீதி ஸ்தலத்திலும் கொன்றது குற்றமல்லவென்று தீர்ப்பு சொல்லப்பட்டதாம்.

* *

புது மாதிரியான போர்டு மோட்டார்கள் ஹென்றி போர்டு அவர்களால் தயாரிக்கப் பட்டிருக்கின்றனவாம். பழைய மாதிரியில் இது சகல விதத்தும் மேற்போனதாம். மணிக்கு 50—60 மைல்கள் ஓடுமாம். இம்மாதிரி மோட்டார்கள் தினம் 1-க்கு 11000 செய்யப்படுமாம். 37500 ஆர்டர்கள் சென்ற வாரம் வரைக்கும் குவிந்திருக்கின்றனவாம்.

* *

3 வாரங்களுக்கு முன்னர் கோயம்புத்தூரினின்று ஈரோடுக்கு ஓடிக்கொண்டிருந்த ரயில் திருப்பூர் ஸ்டேஷனண்மையில் வருங்கால் வண்டியில் ஒரு பிராமணரல்லா ஸ்திரீ பிரசவமாயினள். குழந்தையுடன் ஸ்திரீ ஆஸ்பத்திரிகொணடு போகப்பட்டு சுகமேயிருக்கின்றனர்.

* *

கல்கத்தாவில் மகன்லால் கோஷ் என்ற ஜமீன்தார் தமது நிலங்களிலிருந்து அனேகரை வெளியேற்றி விட்டதால் பகைவைமுற்றி சுட்டுக் கொல்லப்பட்டார். சுட்டவன் இன்னுனத் துலங்கவில்லை.

* *

ராயல் கமிஷனில் யாரார் ஸ்தானம் வகிப்பாரென்பது நவம்பர் 8உ யில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் அறிவிக்கப்படுமாம். பார்லிமெண்டு அங்கத்தினர் மட்டும் கொண்ட கமிஷன் நியமுகம் ஆக ஏற்பாடகியிருப்பதால் இந்தியர் ஸ்தானம் வகிப்பது இயலாதாம்.

* *

தற்போது எல்லா நாடுகளும் தயார் செய்துவரும் நிலைமையை நோக்குங்கால் இனி வரும் உலக யுத்தம் மகாக் கொடியதாயிருக்குமெனவும், பயங்கரமான பல சேதங்களுண்டாகுமெனவும் "ஜமீன்தார்" பத்திரிகை கூறுகிறதாம்.

* *

பிரிட்டிஷ் தீவுகளில் மணிக்கு 60 மைல் வேகங்கொண்ட பலத்த புயற்காற்றென்றுண்டாகி பல விடங்களிலும் உயிர்ச்சேதம், பொருட்சேதம் உண்டு பண்ணி அனேக கட்டடங்களையும் சின்ன பின்னமாக்கி விட்டதாம்.

* *

சமீபத்தில் திருச்சி அமராவதி நதியில் திடீரென வெள்ளப்பெருக்கெடுத்து நாலுபேர்களையும், சில கால் நடைகளையும் அடித்துக் கொண்டு போய் விட்டதாம்.

* *

சென்னையில் தீனல்லா என்னும் முஸ்லீம் வாலிபர் வேலையில்லாத் திண்டாட்டத்தால் திராவகத்தை யுட்கொண்டு தற்கொலை புரிந்து கொண்டாராம்.

* *

பூமியின் மீது 6000 லக்ஷம் ஜனங்களிருக்கக்கூடுமாம்.

* *

உலகத்திலேயே ரயில்வேக்களுக்காக 925 கோடி பவுன்கள் மூலதனம் வைக்கப்பட்டிருக்கிறதாம். ஐரோப்பாவில் மட்டும் இத்தொகையில் பாதிக்கு மேல் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

* *

பிரான்ஸில் இந்திய ராணுவத்தினர் செய்த போராட்டத்தின் ஞாபகார்த்தமாக நோவசாமலி என்னும் இடத்தில் லார்டு பர்க்கென்ஹெட் ஒரு ஞாபகச் சின்னம் திறந்து வைத்தாராம். சின்னம் வட்டமாக மத்தியில் புல்பூமி அமைக்கப்பெற்று அதன் மத்தியில் 50 அடி உயரமுள்ள ஸ்தூபியொன்று நிறுத்தப்பெற்று உச்சியில் கிரீடம் வைக்கப்பெற்று இருபக்கத்திலும் சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றனவாம். இச்சுவர்களில் தான் யுத்தம் செய்து மாண்டுபோன 4847 இந்திய சிபாய்களின் பெயர்கள் செதுக்கப்பட்டிருக்கின்றனவாம். இச்சுவர்களின் பேரில் இரு புலி யுருவங்கள் நாட்டப்பட்டிருக்கின்றனவாம். திறப்பு வைபவம் சிறப்பாயிருந்ததாம்.

* *

சின்னட்களுக்கு முன்னல் சென்னையைச் சார்ந்த திருமதி மேலூர் லட்சுமியம்மாள் கிளாஸ்கோவில் உயர் திருவைத்தியப்பட்டம் பெற்றனராம்.

* *

இப்போது பாரிஸிலிருக்கும் கபூர்தலமகாராஜா தமது அரசாக்ஷியின் 50 வது ஆண்டு விழாவின்போது பாரிஸ் ஏழைகளுக்கு 50000 பிராங்குகள் நன்கொடை யளித்தனராம்.

* *

ஈப்பேரவில் தாழ்வான இடங்களில் வெள்ளப்பிரவாகம் மிகுதியாயிருந்ததால் மழை காலத்தில் வெள்ளச் சேதம் அதிகமேற்படுமெனத் தெரிகிறதாம்.

* *

இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுப்பதால் யாதொரு தீங்குமில்லையென்றும் ஆங்கில சாம்ராஜ்யத்தில் இந்தியா சுயேச்சை நாடாயிருந்தால் ஆங்கிலருக்கு நன்மையும் பலனும் ரனிவுண்டெனவும் மாஜி பிரதம மந்திரி ராம்ஸே மாக்டனல்டு வழுத்துகிறார்.

* *

விதவாவிவாகப் பிரசாரத்தின் பொருட்டு பண்டித சாந்தி சொருப வித்யாலங்காரர் கொச்சிக்கு வந்திருக்கிறாராம்.

* *

மைசூர் ராஜாங்கக் கைத்தொழில் இலாக்காவில்இதுசாறும் 1800 ராட்டைகள் செய்து கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுத்திருக்கின்றனர்.

* *

ஜாம் ஷெட்பூரில் 11-வயதுள்ள ஓர் இந்துப் பையனை முஸ்லீம் ஆக்கிய குற்றத்திற்கு அப்துல் காசிம் என்பவர் 3 மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

* *

பம்பாயில் நடைபெற்ற ஸ்திரீகள் மகாநாட்டில் தேவதாசிகள் மசோதாவை ஆதரிப்பதாகவும் ஆண்களின் விவாக வயதை 21 ஆகவும், பெண்களின் கல்யாண வயதை 16 ஆகவும் நிர்ணயிக்க சட்டசபையினரைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேறினவாம்.

* *

கல்கத்தா நாஷனல்பாங்கில் 760,000 பெறுமான 133 தங்கப் பாளங்களில் 31 பாளங்கள் குறைவு படுகிறதாம். போலீஸார் விசாரணை நடத்திவருகின்றனராம்.

* *

பம்பாய் மாகாணத்தில் மட்டும் 5 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களில் 74000 பேருக்கு விவாகமாகியிருக்கிறதாம். இதில் 3574 பேர் விதவைகளாம். 2000 பெண்களுக்கும் பையன்களுக்கும் 1-வயதுக்குள் விவாகம் நடந்திருக்கிறதாம். 5 முதல் 10 வயதுக்குள் 32 லக்ஷம் பேருக்கு கல்யாணமாகியிருக்கிறதாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# பிராமண ரல்லாதார் இளைஞர் மகாநாடு.

## நிறைவேறிய முக்கிய தீர்மானங்கள்.

சென்னையில் அக்டோபர் 22, 23 தேதிகளில் பெங்களூர் ஸ்ரீமான் அப்பாஸ்கான் சாகிப் அவர்கள் தலைமையின் கீழ் சென்னை மாகாண பிராமணரல்லாதார் இளைஞர் மகாநாடு கூடியது. அங்கு நிறை வேறிய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:—

"பிராமணரல்லாதார் அனைவரும் சமுதாயத் துறையில் ஊக்கங்காட்டி சுயமரியாதையை நிலைநாட்ட வேண்டிய காலம் நெருங்கி விட்டதென்று இம்மகாநாடு கருதுகின்றது".

"நமது இளைஞர்கள் சமுதாயத் தொண்டில் பேரூக்கங்காட்டி யுழைக்க வேண்டுவது அவசியம்".

"பிராமணரல்லாத ஆசிரியர்களை, அவர்கள் பிராமணரல்லாதவராகப் பிறந்த பாபத்திற்காக அலட்சியம் செய்துவிடாமல் அவர்களுக்கு சம்பளம், சாதகம் முதலான பல துறைகளிலும் கூடுமான உதவி புரிந்து ஊக்கமளிக்க வேண்டுமென்று இம்மகாநாடு ஜில்லாப் போர்டு, தாலுகா போர்டு, முனிஸிபாலிட்டி முதலான பல் வேறு ஸ்தல ஸ்தாபனங்களின் பிராமணரல்லாத தலைவர்களையும் கேட்டுக் கொள்ளுகின்றது".

"'சூத்திரன்' என்ற பதத்தை சென்னை சர்க்கார் ரிக்கார்டுகளிலும் பிரயோகித்து வருவது பெரும்பான்மையான பிராமணரல்லாத வகுப்பின் சுய மதிப்பையும், கௌரவத்தையும் பெரிதும் பாதிப்பதா யிருப்பதினால், இம்மகாநாடு இப்பதத்தை இதற்குமுன் ஏற்பட்ட தஸ்தாவேஜுகளிலிருந்தும் எடுக்கச் செய்வதுடன் 'சூத்திரன்' என்ற பதத்தை சர்க்கார் தஸ்தாவேஜுகள் எவற்றிலும் உபயோகிக்கப்படக் கூடாதென்று கூடியசீக்கிரத்திலேயே எல்லா இலாகாக்களுக்கும் உத்தரவொன்று பிறப்பிக்க வேண்டுமென்று சர்க்காருக்கு வற்புறுத்திக் கூறுகின்றது".

"தங்கள் பாடசாலைகளில் ஆதித்திராவிடர், முஸ்லீம், கிறிஸ்தவர் முதலான வகுப்பினரைச் சேர்த்துக் கொள்ள மறுக்கும் பிரத்தியேகக் கல்வி ஸ்தாபனங்கள் எதற்கும் பணம் கொடுக்காமல் நிறுத்திவிட வேண்டுமென்று இம்மகாநாடு சர்க்காருக்கு வற்புறுத்திக் கூறுகின்றது".

"பிராமணரல்லாதாரை ஊக்கப்படுத்துவதை முன்னிட்டு, பிராமணரல்லாதார் சொத்துக்களை பிராமணரல்லாதாரிடமே யிருக்கச் செய்வதன் பொருட்டு இனி எல்லா பிராமணரல்லாதாரும் கூடியவரையில் பிராமணரல்லாதாரால் நடத்தப்படும் ஹோட்டல்களுக்குச் செல்வதுடன், பிராமணரல்லாத வக்கீல்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், குமஸ்தாக்கள் முதலானவர்களைத் தான் அமர்த்திக் கொள்ள வேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகின்றது".

"பாலிய விவாகத்தை ஒழிக்கவும், கலப்பு விவாகம், விதவா விவாகம் முதலியவற்றை ஆதரித்து ஊக்கப்படுத்தவும் முயன்றுவரும் எல்லா இயக்கங்களுக்கும் பிராமணரல்லாத் இளைஞர்கள் பேராதரவளிக்க வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கின்றது".

"சகல வகுப்புகளுக்குள்ளும்சமத்துவமும் சுய மதிப்பும் நிலைக்கச் செய்வதன் பொருட்டும், தீண்டாமையை ஒழிப்பதன் பொருட்டும் கைக்கொண்டு நடத்தப்படும் சத்தியாக்கிரக இயக்கத்திற்கு ஆதரவளித்து பிராமணரல்லாத இளைஞர்களனைவரும் அவ்வியக்கங்களில் கலந்து கொள்ள வேண்டும்".

"ஆலயங்களில் பிறர் உதவியின்றி தாராளமாயும், சுயமாயும் கடவுளைத் தரிசித்து பூசனை செய்யத் தக்க சமத்துவ உரிமை யிருக்க வேண்டுமாதலின் அத்தகைய உரிமையைத் தின வாழ்க்கையில் அனுசரிக்கத் தக்க ஏற்பாடுகள்

# தமாஷ் பேச்சு.

எஜமான்:—பையா தபாலுக்குப் போய் விட்டுவா.

பை:—சாப்பிடப் போகவேண்டுமே.

எ:—அவ்வேலையை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போய்வா.

* *

கேள்வி:—கையிலிருப்ப தென்னையா?

பதில்:—கத்தி

கே:—இப்போதேன் கத்தவில்லை?

* *

யாசகன்:—ஐயா! நாலைந்து நாள் பட்டினி. ஏதாவது தர்மம் செய்யுங்கள்.

பிரபு:—பாவம்! இப்போது எங்கு சாப்பிட்டு விட்டு வருகின்றீர்?

யா:—சின்னக்கடை வீதி பொன்னக் கவுண்டர் கிளப்பில்.

* *

உபாத்தியார்:—தடியா! பேசாதிரு.

பையன்:—இதற்கு முன் ஊமைப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராயிருந்தீரோ?

* *

ஓர் பக்தன் ஓர் பிராமணரைப் பார்த்து—சுவாமி! புகவத் தோஷத்திற்கு நிவர்த்தியிருக்கிறதா?

பிரா:—ரவத்தோசைக்கு நெய் வார்த்திருக்கிறதே! சாப்பிட்டுப்பார்த்துக் காசு கொடும்.

பக்:-ஐயோ! காப்பிக்கிளப் ஞானமே.

* *

ஒருவர் ஒரு கடை முதலாளியைப் பார்த்து:—ஐயா! தங்கள் கடையில் என்னைச் சம்பளத்திற்கு வைத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

மு:—வைத்துக்கொள்ளலாம்; ஆனால் பெட்டிச் சாவி யென்னிடமிருக்குமாகையால் தங்களுக்குப் பிரயோசனமில்லையே யென நினைக்கிறேன்.

---

"ஒவ்வொருவகுப்பும் அதனதன் தாய் பாஷையை விருத்தி செய்ய வேண்டிய தவசியமாதலால் ஆந்திர சர்வ கலாசாலை ஸ்தாபித்ததற்குச் சர்க்காரை பாராட்டி, கூடிய சீக்கிரத்திலேயே தமிழ் சர்வ கலாசாலை ஸ்தாபிக்க வேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகின்றது".

"இந்துக் குடும்பங்களில் சொத்துகளில் பிள்ளைகளைப் போலவே பெண்களுக்கும் சம பாகம் கொடுக்கப்பட வேண்டிய தவசியமாதலால், இந்து தலைவர்கள் இதன் சம்பந்தமாகச் சட்டசபைகளில் மசோதா கொண்டு வந்து நிறைவேற்றச் செய்ய வேண்டும்".

"பிராமணரல்லாத வகுப்பை இழிவு படுத்தி எழுதப்பட்டுள்ள பாரபட்சமான மனுதர்ம சாஸ்திரம் போன்ற புத்தகங்களைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு சர்க்காருக்கு வற்புறுத்திக் கூறுகின்றது".

"கத்தர் பொது ஜனங்களுக்குக் கஷ்ட நிவர்த்தி சாதனமாயும், நன்மையளிப்பதாயுமிருப்பதால் பிராமணரல்லாதாரனைவரும் கத்தரையே உடுத்த வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகின்றது".

"சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பிராமணர்களுக்குத் தனி வார்டு அமைக்கு முறையை இம்மகாநாடு பலமாகக் கண்டித்து ஆக்ஷேபிக்கின்றது".

# நாடார் மகாஜன சங்கம், மதுரை.

நாடார் மகா ஜனங்களே!

நீங்கள் நமது மகாஜன சங்கத்தில் அங்கத்தினரா? இன்றேல், இன்றே வருடச் சந்தா ரூபாய் ஒன்று அனுப்பி அங்கத்தினராகச் சேர்ந்து கொள்ளுங்கள். இவ்வருஷம் நமது சங்கம் ஒருலக்ஷம் அங்கத்தினர்களை எதிர்பார்க்கிறது. அக்கோரிக்கையை நிறைவேற்றுவதே நம்முடைய தற்கடமையாகும்.

காரியதரிஸிகள்,

# நமது கடமைகள்.

## ஜாதிக் கௌரவ மொழியவழி.

கும்பகோணத்தில் நடைபெற்ற நாடார் மகாஜன சங்கம் 11-வது கான்பரன்ஸில் தலைமை வகித்த ஆர். கே. சண்முகம் செட்டியார் எம். எல். ஏ. அவர்கள் தமது அக்ராசனப் பிரசங்கத்தில், நம் தேசத்தவர்களை நீண்டகால மாகப்பீடித்துக்கொண்டு முன்னேற்றத்திற்குத் தடைப்படுத்திவரும் "ஜாதி" என்னும் பிசாசை ஓட்ட மார்க்கம்காட்டும் முகத்தான் "ஒடுக்கப்பட்டோரும் சுயமரியாதையும்" என்னும் தலைப்பின் கீழ் அங்குள்ளவர்களை (நாடார்களை) "எப்போது உங்களை க்ஷத்திரியர் நாங்கள் என்று கூறத் தலைப்படுகின்றீர்களோ, அப்போதே நீங்கள் ஜாதியேற்பாட்டிற்கு பெரு மதிப்புக்கொடுத்து விடுகின்றீர்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். வாஸ்தவந்தான். அவ்வழி கொண்டு ஒவ்வொரு வகுப்பினரும் தாம் தாம் பெருமையாகப் பேசித் தாங்கிக் கொண்டிருக்கும் ஜாதிப் பெயர்களையும், பட்டப் பெயர்களையும், நம் தேச முன்னேற்றத்தையும், நம் இந்திய மக்கள் ஒற்றுமையையும், சுயமரியாதையையும் நாடி விட்டுத் தொலைக்க முன் வரின் அன்றே இந்தியரைப் பிடித்திருக்கும் பீடை யொழியுமன்றோ?

## சமயதிருத்த முதல்வழி.

நம் தேசத்தில், ஜாதி என்னும் கொடுமையை நீக்கவேண்டியதற்கு நம் நாட்டார்கள், தொன்றுதொட்டு எழுத்தளவிலும் வழுத்தலளவிலும் முடி போட்டுக்கொண்டு வரும் ஐயர், ஐயங்கார், நாடார், நாயக்கர், செட்டியார், ரெட்டியார், ஆசாரி, பிள்ளை, முதலியார் என்பனபோன்ற பட்டப்பெயர்களையும், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், வேளாளர், விஸ்வப் பிராமணர், சௌராஷ்ட்ரப்பிராமணர் முதலிய ஜாதிப் பெயர்களையும், சிவகோத்திரம், நரிகோத்திரம், சிங்ககோத்திரம் என்னும் கோத்திரப் பெயர்களையும், அவ்வவற்றின்நாளைபரிமங்களாயும், பிரிவுகளாயும். திரிபுடையதாயும், மருவு மொழியாகியும் இருக்கும் பல பெயர்களையும் அறவே ஒழித்து விட்டு, பொன்னையா, கந்தசாமி, நீலமேகன் என்பனபோன்ற தனிப்பெயருடனாகவாவது ராமய்யா பாகவதர், கந்தசாமிக் கவிராயர், சுப்பையக் கொத்தனார், அங்கப்ப விபசாயி, ஆறுமுகம் உபாத்தியாயர், துரைசாமி வக்கீல், எனதாம்தாம்செய்யும் அந்தந்த நோத் தொழிற் பெயருடனாகவாவது வெளிவருதலே முதல் வழியாகும்.

## புத்துயிரளிப்பதெங்ஙனம்?

நம் நாடார் மகாஜன சங்கத்தில் அங்கத்தினர்களின் சந்தா வசூல்களையும், மற்றும் வரவுசெலவு கணக்குகளையும், ஜெனரல் மீட்டிங்கில் ரிப்போர்ட் மூலம் சமர்ப்பித்திருக்கின்றார்களாயினும், நம் மகாஜன சங்கத்தில், வருஷத்திற்கு வருஷம் அங்கத்தினர்கள் வருவாயும், தலைக்கட்டு வரி வசூலும் எவ்வளவுக் கெவ்வளவு கூடிவருகிறது; அல்லது குறைந்து வருகிறது; இதுவரை எத்தனை தலைக்கட்டுகளுக்குதலைக் கட்டுவரி வசூலாகியிருக்கிறது என்பதையும், நமது சங்கத்தின் பிரசாரமும் எவ்வளவுக் கெவ்வளவு குறைந்திருக்கிறது; அல்லது கூடிவந்திருக்கிறது என்பதையும் நம் நாடார் மஹாஜனங்கள் யாவரும் அறியும் பொருட்டும் மஹாஜனங்களுக்கு உற்சாக மூட்டும் பொருட்டும் 1921-22, 22-23, 23-24, 24-25, 25-26, 26-27 ஆகிய ஆறு வருஷங்களிலும் நமது சங்கத்தில் அங்கத்தினர் விரவு, தலைக்கட்டு வரி வரவு, பிரசாரகர் செய்த பிரசங்க எண்ணம் ஆகிய இவைகளை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வருஷ வாரிக்கணக்காக பத்திரிகையின் மூலமாகவும் விசேஷ அறிக்கைப் பிரசுரத்தின் மூலமும் நாடார் மஹாஜன சங்கம் கனம் காரியதரிஸிகள் வெளிப்படுத்தி அதன் மூலம் விசேஷ ஊக்கத்திற்கு வகை தேடுவார்களென்று நம்புகிறேன்.

## காரியத்திற் காட்டுவதெஞ்ஞான்று?

நமது நாடார் மஹாஜனசங்கம் ஒவ்வொரு கான்பரன்ஸிலும் செய்து வந்திருக்கும் தீர்மானங்கள் பலவற்றுள்ளும், முக்கியமானதாக விரும்பதும், நமது சுயமரியாதையைக் காப்பாற்றக் கூடியதாக விருப்பதும் நம் நாடார் மஹாஜன சங்கம் தோன்றியதற்கு, முதலாவது செய்து காட்டக் கடமைப் பட்டிருப்பதாக இருப்பதுமானநம் குலஏழைமக்கள்ஜீவனோபயமாக ஆங்காங்கு தொழிற்சாலை, ஏற்படுத்துவதும், ஒவ்வொரு ஊரிலுமுள்ள, நம்மவர் ஒற்றுமைக் குறைவை நீக்கி ஒற்றுமையை யுண்டுபண்ணுவதுமாகிய காரியங்களை தக்கமுயற்சியெடுத்து காரியத்தில் செய்துகாட்டு மாறான முயற்சிகளை, நாடார் மஹாஜன சங்கத்தாரும், அதின் சார்பாக நாடார்குல அபிமானிகளும் செய்வார்களாக.

க. அ. புன்னைமுத்துநாடார்,
கல்லூருணி.

# திருமலாபுரம் உறவின்முறை நாடார்களுக்கு விண்ணப்பம்.

நமது உறவின் முறை சாவைக்குட்பட்டவர்கள் நடத்திவைக்கும் அம்மன் திருவிழா உற்சவ காலத்திலும், மற்றும் நடக்கும் நன்மை தீமை முதலிய எக்காரியத்துக்கும் நமக்கு ஆதரவாக இருந்து ஒற்றுமையோடு காரியத்தை நடத்தி வைக்கிறவர்களும் பெரு நோக்கமும் அன்பும் விசுவாசமும் குடி கொண்டவர்களும் நமக்கு உயிர் போன்ற தோழர்களுமான முக்கந்த நாடார், திருமால்நாடார், பண்டாரநாடார், வெள்ளைய நாடார்களான சுமார் 15 தலைக்கட்டுக்காரர்களையும் நமது சபையில் சேர்த்து மகமையும் உற்சவ வரியும் வசூல் செய்து பரிபாலனம் நடத்தி கண்ணியம் அதிகப்பட வேணுமாயும், மேற்படி சுமார் 15 தலைக்கட்டுக் காரர்களும் ஒற்றுவரவேணுமாயும் கேட்டுக் கொள்கிறேன் என்று மீ. சி. சுந்தரநாடார் எழுதுகிறார்.

# தேவை.

கோயில்பட்டி தாலுகா குளத்தூர் நாடார் இந்து எலிமெண்டரி பாடசாலைக்கு எஸ். எஸ். எல். ஸி. பரிக்ஷை கொடுத்து ட்ரெயினிங் பரீக்ஷையில் தேறிய ஒரு உபாத்தியாயர் தேவை. அனுபோகத்தையும் ஆற்றலையும் கவனித்து சம்பளம் நிர்ணயிக்கப்படும். சர்ட்டிபிக்கேட்டுகளுடன் மானேஜர் ஸ்ரீமான் வெற்றிவேல்நாடாருக்கு அப்ளிக்கேஷன் செய்து கொள்ளவும்.

# இடியால் மடியலானூர்.

திருவாங்கூரைச் சேர்ந்த பிள்ளைத் தோப்பில் 20—10—27 பகல் 12 மணிக்கு இடிவிழுந்து இரு ஆண்கள் மாண்டனர் என்று ஸ்ரீமான் செல்லத்துரைநாடார் எழுதுகிறார்.

---

எவரொருவர் பிறிதொருவர் துயரத்தில் உண்மை யனுதாபமில்லா தொழிகின்றனரோ, அவர் பின்பு அதே துயரத்தில் அல்லற் படுவது திண்ணம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# தற்கால இந்தியா.

[ சுவாமி விவேகானந்தர் அருளியது. ]

(முன் தொடர்ச்சி)

வைதிகன் தேவர்களைத் தெரிந்து கொண்டு அவர்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளுகிறான். ஆகையினால் அவன் ஒரு தேவனாகப் பூஜிக்கப் படுகிறான். அவன் உலக நினைப்புகளை பின்னே தள்ளி ஒதுக்கி விடுகிறானாபடியால் ஆகாரம் சம்பாதிப்பதற்கு அவன் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட வேண்டியதிருக்கிறதில்லை. எல்லா ஆகாரத்தினுடையவும் மிகச் சிறந்தவையும், மிக முக்கியமானவையுமான பாகங்கள் தேவர்களுக்கு நைவேத்தியங்களாகக் கொடுக்கப்பட வேண்டியனவாம். பூலோகத்தில் இந்தத் தேவர்களுக்குப் பிரத்தியட்சப் பிரதிநிதிகள் வைதிகர்களேயாவர். அவர்களுடைய வாய்களின் மூலமாகவே தேவர்கள் நைவேத்தியங்களை எடுத்துக்கொள்ளுகிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ சமுதாயமானது வைதிகனுக்குச் சாவகாசம் கொடுக்கிறது. ஆகையினால் பிரகிருதியில் தியானம் செய்து கொண்டும் உயர் நினைப்புகளை நினைத்துக் கொண்டுமிருக்கும்படியான சந்தர்ப்பத்தை அவன் அடைய முடிகிறது. ஆதலால் வைதிக சக்தி ஆதிக்கம் வகிக்கும் காலத்திலே முதலில் அறிவினுடையவும், வித்தையினுடையவும் அபிவிருத்தி ஆரம்பமாகிறது. ஒரு பக்கத்திலே பயங்கரமான சிங்கமாகிய அரசனுக்கும், மறு பக்கத்திலே பயந்து நடுங்கும் ஆட்டுக் கூட்டமாகிய குடி ஜனங்களுக்குமிடையில் வைதிகன் நிற்கிறான். அழிக்கும் எண்ணத்துடன் சிங்கம் பாய்கின்ற பாய்ச்சல் வைதிகன் கைகளிலே உள்ள ஆத்ம சக்தியின் அடக்குக் கோலினால் தடுக்கப்படுகின்றது. ஐஸ்வர்யத்தையும், ஆட்களையும் உடைத்தாயிருக்கின்ற கர்வத்தினால் பைத்தியமேறி யிருக்கின்ற அரசனுடைய கொடுங்கோல மனத்தின் அக்கினியானது அவனுடைய வழியில் எதிர்ப்படுகின்ற எதையும் எரித்துச் சாம்பலாக்க வல்லதாயிருக்கின்றது. ஆனால் தண்ணீர் நெருப்பை யணைப்பது போல, ஐஸ்வர்யத்தையோ ஆட்களையோ உடைத்தாயிராமல் ஆத்மீக சக்தியையே பலமாகக் கொண்டுள்ள வைதிகனிடமிருந்து வரும் ஒரு வார்த்தையே அந்தக் கொடுங்கோல் ராஜ மனத்தை அடக்கக்கூடியதாயிருக்கிறது. வைதிக ஆதிக்கத்தின் உயர்வுடனே நாகரீகத்தின் முதலாவது உற்பத்தியும், மிருக லட்சணத்தின் மீது தெய்வ லட்சணம் அடைகிற முதலாவது ஜயமும், மனுஷ்ய சரீரமாகிய இந்த சதைக் குவியலில் பிரகிருதியின் அடிமையில் அடங்கிக் கிடக்கின்ற தெய்வீக சக்தியின் முதலாவதான வெளிப்பாடும், ஜடத்தின் மீது சைதந்யம் அடைந்த முதலாவது வெற்றியும் காணப்படுகின்றன. வைதிகனே ஜடத்திலிருந்து சைதந்யத்தைப் பகுத்தறியும் முதலாவது விவேகியாவன். மறு உலகத்துடன் இவ்வுலகு ஐக்யமாவதற்கு முதலாவது உதவியாவான். தெய்வத்தினிடமிருந்து மனிதனிடம் வந்த முதலாவது தூதனாவான். அரசனுக்கும், குடிகளுக்கும் இடையே இருந்து இருதரத்தாரையும் சேர்த்து வைக்கின்ற மத்திய பாலமுமாவன். ஜகத்தின் க்ஷேமத்தினுடையவும் நன்மையினுடையவும் முதலாவது துளிர் அவனுடைய ஆத்ம சக்தியினால் வித்தையினிடத்தும், அறிவினிடத்தும் அவனுக்குள்ள சிரத்தையினால் அவனுடைய வாழ்க்கையின் பல்லவியாயிருந்து கொண்டு அவனுடைய சொந்த ஜீவரத்தப் பெருக்கினால் கூடப் பாய்ச்சப் பெற்று வளர்கின்ற அவனுடைய தியாகத்தினால் போஷிக்கப்படுகிறது. ஆகையினால் தான் ஒவ்வொரு தேசத்திலும் மிக மிக முதன்மையான பூஜை அவனுக்கு அளிக்கப்படுகிறது.

தீமைகளுமிருக்கின்றன. ஜீவித வளர்ச்சியுடன் அதே காலத்தில் மரண வித்தும் விதைக்கப்பட்டிருக்கிறது. இருட்டும் வெளிச்சமும் எப்போதும் ஒன்றாகவே செல்கின்றன. தகுந்த காலத்திற்றடுக்கப்படாவிட்டால் சமுதாயத்தை அழிக்கக் கூடிய பெரிய தீமைகளும் உண்மையில் இருக்கின்றன. தடித்த ஜடத்தின் மூலமாக நடைபெறும் சக்தியின் லீலை சகலருடைய அனுபவத்துக்கும் ஏற்றதாயிருக்கிறது. யுத்த கோடரிகளினுடையவும், வாள்களினுடையவும் விளையாட்டிலே அல்லது நெருப்பினுடையவும், மின்னலினுடையவும் எரிக்கும் தன்மைகளிலே காணப்படுகிறபடி ஸ்தூல ஜட சக்தியின் பலமான வெளிப்பாட்டை ஒவ்வொருவனும் பார்க்கிறான்; ஒவ்வொருவனும் தெரிந்து கொள்கிறான். எவரும் இந்த விஷயத்தைப்பற்றி சந்தேகிக்கிறதில்லை. அவை உண்மைதானோவென்று ஒருபொழுதும் கேள்வியே ஏற்பட முடியாது. ஆனால் எங்கே சக்தியின் ஸ்தானமும், லீலையின் மத்தியமும் முழுதும் மனமேயாயிருக்கிறதோ, எங்கே அந்தச் சக்தியானது சில விசேஷ வார்த்தைகளினால் அவற்றை உச்சரிப்பதிலே சில விசேஷ மாதிரிகளில் சிலரகஸ்ய ஆசைகளைப்பற்றிசெய்யும் மானஸீக தபத்தில் அல்லது இவை போன்றுள்ள மனத்தினுடைய வேறு முறைகளிலும் பொருத்தங்களிலும் கட்டுப்பட்டுக் கிடக்கின்றதோ அங்கே ஒழி நிழலுடன் சேர்ந்திருக்கிறது. அங்கே ஏற்றமும் இறக்கமும் மற்றப்படி அசைக்க முடியாத நம்பிக்கையை இயற்கையாகக் கலைக்கின்றன. அங்கே விஷயங்கள் நேருக்கு நேரே பிரத்தியட்சத்தில் பார்க்கப்படுகிற பொழுதிலும் கூட அவை உண்மையான சம்பவங்கள் தானோவென்று சந்தேகங்கள் கிளம்புகின்றன. எங்கே துன்பம், பயம், கோபம், தீய சிந்தை, பழிக்குப் பழி இவையும், இவைபோன்ற மனிதனுடைய குணங்களும் ஒவ்வொருவரும் அறியக் கூடிய ஆயுத சக்தியை விட்டுவிட்டு நோக்கத்தை யடைவதற்கு ஸ்தூல ஜட உபாயங்களை விட்டுவிட்டுத் தங்கட்குப் பதிலாக ஸ்தம்பனம், உச்சாடனம், வசீகரணம், மாரணம் இவை போன்ற ரகஸ்ய மனோ முறைகளைத் தங்கள் பலப்பிராப்தியின் பொருட்டு ஏற்படுத்திக் கொள்கின்றனவோ அங்கே புகை போன்று தெளிவின்மையாம். ஒரு மேகம் மறைவாயுள்ள அத்தகைய ரகஸ்ய உலகத்திலே எப்பொழுதும் வசித்துக் காலம் கழித்து வருகின்ற அந்த மனிதர்களுடைய மன ஆகாயத்தைச் சூழ்ந்து கொள்வது இயற்கையே. அத்தகைய ஓர் மனத்துக்கு நேர் முறையில் செய்யும் வழி தோன்றாது. தோன்றினாலும் மனமானது அதை வளைவு பாதைகளிலே திருப்பிவிட்டு விடுகிறது. இதெல்லாவற்றினுடைய கடைசிப் பயன் யாதெனில், உண்மை இன்மையேயாம். மிகக் குறுகிய இருதய முண்டாவதேயாம். எல்லாவற்றுக்குமேலாக மிகப் பயங்கரமானது யாதெனில், இன்னொன்று பரம சிரேஷ்டத்துவத்தை யுடைந்ததைக் கண்டு தீய சிந்தையுடனே பொறாமையுண்டாகி அதனாலேற்படும் கடுமையான அற்பப் புத்தியாம். வைதிகன், தேவர்களை எனக்குக் கீழாக்கியிருக்கிறதும், சரீர மனோ வியாதிகளின் மீது எஜமானத்துவம் கொடுத்திருக்கிறதும், பேய் பிசாசுகள் இன்னும் பார்வைக்குட்படாத இதர எக்ஷணிகள் இவை எனக்கு ஊழியம் செய்யும்படி செய்திருக்கிறதும் ஆகிய சக்தியை ஏன் நான் விட்டுவிட வேண்டும்? கடுமையான தியாகம் செய்து நானிந்தச் சக்தியை அருமையாக அடைந்திருக்கின்றேன். இதை நான் அடைவதற்கு என்னுடைய ஐஸ்வர்யம் பெயர் கீர்த்தி பூலோக சுகங்கள் சௌகர்யங்கள் எல்லாவற்றையும் தியாகம் செய்திருக்கிறேன். அப்படி இருக்க நான் ஏன் அதை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்? என்று தானே சொல்லிக் கொள்வது இயற்கைதான். இன்னும் அந்தச் சக்தியானது முழுதும் மானஸீகமானது. அதைப் பரிபூரண ரகஸ்யமாக வைத்துக் கொள்வதற்கு எத்தனை சந்தர்ப்பங்களிருக்கின்றன! சந்தர்ப்பங்களாம் இந்தச் சக்கரத்திலே அகப்பட்டுக் கொண்டு மனுஷப் பிரகிருதியானது தான் அவசியம் எப்படித் தீர வேண்டுமோ அப்படியாய் விடுகிறது. எப்பொழுதும் இடைவிடாத தன் மறைவையே அப்பியசிக்கப் பழகுவதினால் அது மிகுந்த சுயநலத்துக்கும், வேஷத்துக்கும் இரையாகிவிடுகிறது. கடைசியாக அவற்றாலேற்படும் விஷம் நிறைந்த பலன்களிலே அழிந்து விடுகிறது. மறைத்து வைக்க வேண்டுமென்ற இந்த ஆசையே தகுந்த காலத்தில் எதிர்ச் செய்கையாகத் திருப்பி யடிக்கின்றது. தகுந்தபடி யநுபவித்து வியாபிக்கச் செய்ய வேண்டிய முயற்சியில்லாக் குறையால் எல்லா அறிவும் ஞானமும் அனேகமாக இழந்துவிடப் படுகிறது. எஞ்சியுள்ள கொஞ்சமும் பிரகிருதி யதீதமான ஸ்தானத்திலிருந்து கிடைக்கப்பட்டதாகக் கருதப் படுகிறது. ஆகையால் நூதன வித்தை யடைந்து புதிய கலைகளைச் சம்பாதிப்பதற்குப் புது முயற்சி செய்ய வேண்டியதற்குப் பதிலாகப் பழையதில் எஞ்சியுள்ளவற்றை அடைந்திருக்கும் அழுக்கை யெல்லாம் நீக்கி சுத்தம் செய்து விருத்தி பண்ணக்கூட முயற்சிப்பது பயனற்றதாயும், வீணாயும் கருதப்படுகிறது. இவ்விதமாக முந்திய ஞானத்தை, முந்திய எதையும் லட்சியம் செய்யாத தன்னம்பிக்கைக் குணத்தை யிழந்தவனாகி வைதிகன் இப்பொழுது தன்னுடைய முன்னோர்களின் பெயரால் மாத்திரம் பெருமை யடைந்து கொண்டு சிரேஷ்டர்களான தன்னுடைய முன்னோர்கள் அநுபவித்து வந்த அதே பெருமையையும், அதே பாத்தியதையையும், அதே மரியாதையையும், அதே உயர்வையும் அழுக்குப்படாமல் காப்பாற்ற வீணே முயற்சிக்கிறான். பலன் யாதெனில், அவன் இதர ஜாதிகளுடன் கடுமையாக முட்டிக்கொள்கிறான்,

எங்கே முன்னிலும் அதிகப் பலமுள்ள ஜீவிதத்தின் எழுச்சி யுண்டாகின்றதோ அங்கே அது பழையதும் அழிந்து போய்க் கொண்டிருப்பதுமானதை ஜயித்து அந்த இடத்தைத் தான் அடைய முயற்சிக்கும் என்பது பிரகிருதி நியதி. தகாதது மரிப்பதற்கும் மிகத் தகுந்தது உயிர் வாழ்தற்கும் பிரகிருதி அநுகூலமாயிருக்கிறது. வைதிக ஜாதிக்கும், இதர ஜாதிக்கும் உண்டான போராட்டத்தின் கடைசிப் பயன் இன்னதென்று முன்னமே சொல்லப்பட்டுவிட்டது.

வைதிகனுடைய உயர்வு காலத்திலே அந்தியந்த ஆவலுடன் செய்யப்பட்ட உண்மை யாராய்ச்சியிலேசெல வழிக்கப் பட்ட அவனுடைய தியாகமும், தன்னடக்கமும், தபசும் அவனுடைய வீழ்ச்சி காலத்திலே தன்னலத்தைத் திருப்தி செய்யும் விஷயங்களைச் சேகரிப்பதிலும் இதரர்கள் மீது தனக்காதிக்க முண்டென்பதை வியாபகப் படுத்திக் கொள்வதிலும் புதிதாகச் செலவழிக்கப்பட்டன. எந்தச் சக்தி அவனிடத்தில் மத்திய ஸ்தானத்தை யடைந்து அவனுக்கு எல்லாக் கௌரவத்தையும் அளித்ததோ அந்தச் சக்தி இப்பொழுது மிகத் தாழ்ந்த நரகத்துக்கு இழுத்துக் கொண்டு வரப்பட்டு விட்டது. வைதிக சக்தியானது லட்சியத்தை இழந்து விட்டு சிலந்திப் பூச்சியைப்போல் தன்னாலேயே பின்னப்பட்ட வலையில் அகப்பட்டுக் கிடக்கின்றது. மற்றவர்களின் கால்களிலே மாட்டுவதற்குத் தலைமுறை தலைமுறையாக மிகுந்த சாக்கிரதையோடு செய்யப்பட்ட விலங்கு அதனுடைய கால்களையே ஓராயிரம் சுற்றாகப் பிணைத்துக் கட்டியிருக்கிறதுமன்னியில் நூற்றுக் கணக்கான வழிகளில் அதை அசைய வொட்டாமலும் செய்து வருகின்றது. இவ்வெண்ணற்ற பந்தங்களாகிய இரும்புப்பெட்டியிலேஜன சமுதாயத்தை எப்பொழுதும் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் சரீரத்தையும், மனதையும் சுத்தி செய்வதற்கு வெளியுபாயங்களாக அது எல்லாப் பக்கங்களிலும் பரப்பிய கணக்கற்ற சடங்குகள், கிரியைகள், வழக்கங்கள் இவற்றாலாய வலையின் முடிவற்ற நூலில்கப்பட்டு வைதிக சக்தியானது இனி எழுந்திருக்க முடியாதபடி உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை சிக்கிக் கொண்டு இப்பொழுது ஏக்கத்திலே தூக்க முற்றிருக்கிறது. அதிலிருந்து தப்பிக்க முடியாத வலையைக் கிழித்துவிட்டால் வைதிகத் தன்மை அஸ்திவாரா முதல் அசைக்கப்பட்டுவிடும். ஒவ்வொரு மனிதனிடத்திலும் இயற்கையாகவே அபிவிருத்தி யுடைய வேண்டுமென்ற பலமான ஒரு ஆசை வேரூன்றியிருக்கிறது. மனிதன் வைதிக விலங்குகளால் கட்டப்பட்டுக் கிடக்கிறவரையில் இவ்வாசையைப் பூர்த்தி செய்து கொள்வது அசாத்தியம் என்று கண்டு இவ்வலையைக் கிழித்தெறிந்து பணம் சம்பாதிப்பதற்காக மற்ற ஜாதியாரின் தொழில்களை யெடுத்துக் கொள்கிறவர்களைச் சமுதாயமானது அவர்களுடைய உரிமையினின்றும் நீக்கி விடுகிறது. தலையிலே மயிர் வைத்துக் கொள்வதற்குப் பதிலாக ரோமத்தைக் கத்தரித்து விட்டு தங்கள் பூர்வீக வழக்கங்களையும், பழக்கங்களையும் விட்டு விட்டு அரை ஐரோப்பிய உடை உடுத்திக் கொண்டு இரு ஜாதி மாதிரியில் மேனாட்டிலிருந்து புதிதாகப் புகுத்தப் பட்ட வழக்கங்களை யனுசரிக்கின்ற பிராமணர்கள் எனப்படுவோருடைய பிராமணத் தன்மையில் ஜன சமுதாயத்துக்கு நம்பிக்கை கிடையாது. புதிதாக வந்திருக்கும் ஆங்கில ராஜாங்கமானது எங்கெல்லாம் புதிய முறைக் கல்வியை நுழைத்து ஐஸ்வர்யம் பெருகுவதற்குப் புதிய கால்வாய்களைத் திறந்து விடுகின்றதோ இந்தியாவின் அந்தப் பாகங்களிலெல்லாம் எண்ணற்ற பிராமண வாலிபர்கள் தங்கள் பரம்பரை வைதிகத் தொழிலை விட்டு விட்டு மற்ற ஜாதியார்களுடைய தொழில்களை ஏற்றுக் கொண்டு பணம் சம்பாதித்துத் தனவந்தர்களாக முயற்சித்து வருகிறார்கள். அதன் பலன் யாதெனில், வைதிக வகுப்பாருடைய வழக்கங்களும், பழக்கங்களும் முன்னோர்களிடமிருந்து பரம்பரையாகவந்தவை சிதற அடிக்கப்பட்டு தேசத்திலிருந்து வெகு சீக்கிரம் மறைந்துபோய்க் கொண்டிருக்கின்றன.

(தொடரும்.)

---

தீபாவளி யன்று மதுரையில் ஒரு சௌராஷ்டிர வாலிபனுக்கும் நாற்பது வயதுள்ள ஒரு பிராமண மாதுக்கும் வாய்ச்சண்டை ஏற்பட்டதில் வாலிபன் அம்மாதை துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடிவிட்டான், அவனைப் பிடித்த மற்றொருவரையும் அவன் சுட்டான், வைத்தியர் அந்த அம்மாளைச் சோதனை செய்ததில் கழுத்திலே தாலி யிருந்ததால் குண்டு அவள் கழுத்துக்குள் செல்லாமல் தாலியைத்தாக்கி நின்றுவிட்டதென்றும், தாலியே அவளைக் காப்பாற்றியதென்றும் சொன்னார்,

* *

பனகால் அரசர் ஸ்ரீமான் ஓ. கந்தசாமி செட்டியாரை அவமதித்துப்பேசினாரென்று சென்ற ஆண்டில் ஏற்பட்ட வழக்கில் பனகால் அரசர் ஒரு தம்படி நஷ்டம் கொடுக்க வேண்டுமென்று நீதிபதி பீஸ்லி உத்தரவு செய்தார், அது காரணதென்று செட்டியார் செய்த அப்பீல் அடுத்த வாரம் விசாரணைக்கு வரும்,

* *

தென்னாட்டில் பல இடங்களில் கலெக்டரா யிருந்தவரும் சென்னையில் தொழிற் கமிஷனரா யிருந்தவருமான ஸர். ஜார்ஜ் பாடிசன் சில தினங்களுக்கு முன் லண்டனில் காலஞ் சென்றார்.

* *

ஆஸ்திரேலியாவில் ஒரு மாதிரியான பெரிய மரம் இருக்கிறதாம், அதன் இலைகளைத் தொட்டால் இழுத்துக் கொன்றுவிடுமாம், ஆனதால் இது ராக்ஷஸ மரமென நவிலப்படுகிறதாம்.

* *

உலகமுழுதும் பயிராகும் பயிர்களில் 100-க்கு 10 வீதம் புழு பூச்சிகளால் சேதமாகின்றனவாம்,

* *

இங்கிலாந்தில் ஆண்களைவிட பெண்கள் 1677000 பேர் அதிகமாயிருக்கின்றார்களாம்,

* *

பறவைகளில் ஆணினம் பெண்ணினத்தை தனது சிறகுகளினால் மயக்கி காதலைப்பெறுகிறதாம்,

* *

வண்ணாத்தி பூச்சிகளில் ஆண் பெண்ணை வாசனைகொண்டு மயக்குகின்றதாம்,

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# ஸர். சதாசிவ அய்யரின் சாட்சியம்.

## ஒழுக்கத்தாலன்றி பிறப்பால் உயர்வு தாழ்வில்லை.

ஸ்ரீமான்ஜே.எஸ். கண்ணப்பரை திருவண்ணாமலைக் கோவிலில் பிரவேசிக்க வொட்டாது அர்ச்சகர்கள் தடுத்ததின் காரணமாய் ஏற்பட்ட வழக்கில் திருவண்ணாமலை சப் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் முன் இந்துமத நிபுணர் என்ற முறையில் ஸர். சதாசிவ அய்யரவர்கள் சாட்சி பகர்ந்ததாவது:—

கே:—தாங்கள் ஹைகோர்ட்டின் மாஜி நீதிபதி யல்லவா?

ப:—ஆம்.

கே:—தாங்கள் இந்துமத பரிபாலன போர்டின் தலைவரல்லவா?

ப:—ஆம்.

கே:—சென்னைச் சட்டசபையில் இந்துமத பரிபாலன சட்டம் வாதிக்கப் பட்ட காலத்து தாங்கள் எக்ஸ்பெர்ட் மெம்பராக அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட வில்லையா?

ப:—ஆம்.

கே:—இந்துக்கள் என்போர் யார்?

ப:—சமஸ்கிருதத்திலுள்ள ருக்வேத மந்திரங்களிலும், ரிஷிகளின் வாக்கியங்களிலும் நம்பிக்கையுள்ளவர்களெல்லாம் இந்துக்களென்றுநான் நினைக்கின்றேன்.

கே:—ஆதிதிராவிடர்கள்இந்துக்களா?

ப:—ஆதிதிராவிடர்கள் மேற்கூறியவைகளில் நம்பிக்கையுடையவர்களாகவிருந்தால் அவர்களும் இந்துக்களே.

கே:—இந்து மதத்துள் பிறப்பினுல் உயர்வு, தாழ்வு என்ற வேற்றுமை உண்டா?

ப:—பிறப்பினுல் உயர்வு தாழ்வு உண்டென்ற கொள்கைக்கு இந்து சாஸ்திரங்கள் மதிப்புக் கொடுக்கவில்லை.

கே:—இந்துக்களுள் பல வகுப்பாருள்ளும் உடன் உண்ணல் வைத்துக் கொள்ளலாமா?

ப:—எவன் ஒருவன் சுத்தமான உணவை அன்புடன் அளிக்கின்றானே அவன் யாராயினும் அவனுடன் உண்ணலாம்.

கே:—ஆதிதிராவிடர்கள் வீட்டில் சாப்பிட்டதாலும், அவர்களைத் தீண்டியமையாலும் ஓர் இந்து தன் சாதியையும், கோயிலுக்குள் நுழையும் உரிமையையும் இழக்கின்றானா?

ப:—குடிகாரனான ஓர் ஆதிதிராவிடனோடு சாப்பிட்டால் தான் ஒருவன் சாதியை இழக்கின்றான். இல்லாமல் போயின் இல்லை.

கே:—குடிகார ஒரு பிராமணனுடன் அல்லது ஓர் உயர்ந்த சாதியானுடன் இந்து என்பவன் சாப்பிட்டால், சாப்பிட்டவன் சாதியை இழக்கின்றானா?

ப:—எந்த வகுப்பைச்சார்ந்த குடிகாரனோடு சாப்பிட்டாலும் சாதியையும், கோயிலுக்குள் நுழையும் உரிமையையும் இழக்கின்றான். ஆனால் தான் குடிகாரனோடு சாப்பிட்ட குற்றத்திற்காக கோயிலுக்குள் நுழையுமுன் வருந்துவானாயின், மீண்டும் இழந்த உரிமையைப் பெறுகின்றான்.

கே:—தாங்கள் சமுதாய சீர்திருத்தக்காரரல்லவா?

ப:—ஆம்

கே:—தீண்டாமையைக் குறித்தும் சாதி ஒழிவதைக் குறித்தும் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப:—பிறப்புக்கு மிகவும் உயர்வு கொடுக்கும்படியான இப்பொழுதிருக்கும் சாதி வேற்றுமை ஒழியவேண்டியதுதான். குடிகாரன், அசுத்த முடையவன், நோயாளி, கெட்ட குணம் உடையவனைத் தொடாமல் இருப்பது நலம். மேற்கூறியவர்கள்தான் தீண்டப்படாதவர்களன்றி, மற்றவர்களெல்லாம் தீண்டப்படக் கூடியவர்களே!

கே:—ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குள் போகலாமென்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்களா?

ப:—சொல்லியிருக்கலாம். சுத்தமான பக்தியுள்ள ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குள் போவதைப்பற்றி எனக்கு ஆட்சேபனை கிடையாது.

கே:—தாங்கள் ஆதிதிராவிடர்களுடன் சாப்பிட்டிருக்கின்றீர்களா?

ப:—நான் ஆதிதிராவிடர்களுடன் சாப்பிட்டிருக்கவேண்டும். சென்னையில் கூடிய தீண்டாமை விலக்கு மகாநாடு சம்பந்தமாக விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடந்த விருந்தொன்றில் நான் ஆதிதிராவிடர்களுடன் சாப்பிட்டிருக்கிறேன்.

கே:—தாங்கள் சென்ற கார்த்திகை திருவிழாவுக்குத் திருவண்ணாமலை வந்திருந்தீர்களா?

ப:—ஆம்.

கே:—நீங்கள் கோயிலுக்குள் சென்று அண்ணாமலையைத் தெரிசனம் செய்தீர்களா?

ப:—ஆம்.

கே:—தங்களுடன் கோயில் சிப்பந்திகள் வந்து சாமி தெரிசனம் செய்து வைத்தார்களா?

ப:—கோயில் சிப்பந்திகள் வந்தார்களோ, வரவில்லையோ எனக்கு ஞாபகமில்லை.

கே:—குருக்களெல்லாம் கோயில் வேலைக் காரர்களா?

ப:—ஆம். அவர்கள் கோயில்வேலைக் காரர்கள் தான்.

கே:—அவர்கள் நம்பிக்கைத்துரோகம் செய்தாலும், சரிவர நடந்து கொள்ளாமல் இருந்தாலும் அவர்களுக்கு அபராதம் விதிக்கவும் வேலையினின்று நீக்கவும் முடியுமா?

ப:—இந்துமத பரிபாலனச் சட்டம் 43-வது ஸெக்ஷன்படி அவர்களைத் தண்டிக்கலாம்.

கே:—குருக்கள் தம்மனம் போல் நினைத்த நேரத்தில் பூசை செய்யவும், கதவை மூடிக்கொள்ளவும் செய்யலாமா?

ப:—அவர் அவ்விதம் செய்ய முடியாது.

கே:—கோயில் பூசைகள் இந்த இந்தக் காலத்தில் இந்த இந்த விதமாய் நடைபெற வேண்டுமென்ற ஒழுங்கிருக்கின்றதா?

ப:—ஆம்.

கே:—கோயிலில் நடக்கும் ஒழுங்கீனங்களுக்கு எக்ஸிகியூட்டிவ் ட்ரஸ்டி பாத்தியப் பட்டவரல்லவா?

ப:—ஆம்.

கே:—பிப்ரவரி மாதம் 7-ந் தேதிக்குப் பின் 1-வது எதிரியும், 3-வது எதிரியும் தங்களை வெட்டவலம் ஜமீன்தார் அவர்களுடன் வந்து பார்த்தார்களா?

ப:—பார்த்ததாகத்தான் ஞாபகம்.

கே:—இந்த வழக்கைக் குறித்து அவர்கள் தங்களிடம் ஏதாவது முறையிட்டுக் கொண்டார்களா?

ப:—ஞாபகமில்லை.

கே:—தாங்கள் எப்படியாவது இந்த வழக்கை சமாதானப்படுத்த வேண்டுமென்று தங்களிடம் வேண்டிக்கொள்ளப்பட்டதா?

ப:—ஞாபகமில்லை.

கே:—வைஷ்ணவர்களுக்கு சிவன் கோயிலுக்குள் நுழைய உரிமை உண்டா?

ப:—உரிமை உண்டு.

குறுக்கு விசாரணை செய்யப்பட்டதில் அவர் கூறியதன் சாரம்:—

ஆதிதிராவிடர்களுக்குப் பொதுவாக வேதத்தில் நம்பிக்கை உண்டு: ஆகையால் அவர்கள் இந்துக்களே. தென்னிந்தியாவில் மட்டும் அவர்கள் கோயிலுக்குள் நுழையவிட மறுக்கப்படுகின்றார்கள். இந்துமதத்தில் பல தீங்குகள் இருக்கின்றன. உதாரணமாக பிறப்பை முன்னிட்டு ஒரு ஜாதியைச் சார்ந்திருக்கிறவன், எவ்வளவு உயரிய ஒழுக்கம் குணமுடையவனானாலும் தான் பிறந்த சாதியைவிட்டு மேலேற முடியவில்லை. இத்தகையவும் இவைபோன்றவையுமான தீங்குகளை எல்லாம் நான் ஒழிக்க விரும்புவதால் என்னைச் சமுதாய சீர்திருத்தக்காரன் என்று சொல்லிக்கொள்ளுகின்றேன். சில கோயில்களுள் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற வித்தியாசம் இல்லை. அவ்வித்தியாசங்கள் எனக்கு விருப்பமில்லை. சிதம்பரத்தில் தீட்சதர்களே அன்னிபெசண்டு அம்மையாரைப் பிராமணர்கள் போகும்வரை அழைத்துக்கொண்டு போயிருக்கின்றார்கள். எனக்கு இச் சம்பிரதாயங்களிலும் 2 அணா கொடுக்கும் பிராயச் சித்தங்களிலும் நம்பிக்கை இல்லை. என்னுடைய பிராயச்சித்தம் என்பது செய்த குற்றத்துக்கு வருந்துவதும் அக்குற்றம் போகக்கடவுளை வணங்குவதுமேயாகும். தென்னிந்தியாவில் தான் கெர்ப்பக்கிருகத்துள் நடக்கும் பூசை குருக்களால் மட்டும் நடைபெறுகின்றது. சுகாதாரத்தை முன்னிட்டும் சௌகரியத்தை முன்னிட்டும் கெர்ப்பக்கிருகத்துள் குருக்கள் மட்டும் போவது நல்லது. தீண்டாமை இப்பொழுது குறைந்து வருகின்றது. பெசண்டு அம்மையார் வந்ததற்காகச் சிதம்பரத்தில் பிராயச் சித்தம் செய்யப்படவில்லை. கோயில்களில் இப்பொழுது நடக்கும் காரியங்கள் மாமூல் படியும், சாஸ்திரப்படியும், சாஸ்திர விரோதப்படியும் இந்த மூன்று வகையாக நடைபெறுகின்றன. மாமூல் என்பது கோர்ட்டார் முடிவு செய்திருப்பதாகும்.

(2-ம் பக்கத்தின் தொடர்பு)

# ஸத்திய தரிசனம்.

### பாகம் 4. அத்தியாயம் 22.

### கடவுள் யாரைக் காப்பாற்றுகிறார்?

சமீப காலத்துக்குள் இந்தியாவுக்குச் செல்வேனென்னும் எண்ணத்தையே விட்டுவிட்டேன். ஒரு வருஷ காலத்துக்குள் திரும்பி வருவதாக என் மனையாளிடம் வாக்களித்திருந்தேன். திரும்பிப் போகக்கூடிய அறிகுறியொன்றுமில்லாமலே அந்த ஒரு வருஷம் கழிந்து விட்டது. எனவே நான் என் மனைவியையும், மக்களையும் அழைத்துக் கொள்வதென்று தீர்மானித்தேன். அவர்கள் தென்னாப்பிரிக்காவுக்கு வந்து கொண்டிருந்தபோது என் மூன்றுவது குமாரனான ராமதாஸ், அவர்களை ஏற்றிவந்த படகின் அதிகாரியுடன் விளையாடித் தன் கையை முறித்துக் கொண்டான். படகு அதிகாரியும், கப்பல் டாக்டரும் அவனுடைய நிலைமையை நன்றாகவே கவனித்திருந்தார்கள். எனினும் கரையையடையும்போது ராமதாஸின் கை கட்டப்பட்ட படியே தொங்கிக்கொண்டிருந்தது. நாங்கள் வீட்டையடைந்ததும் கூடிய விரைவில் நல்ல டாக்டரைக் கொண்டு சிகிச்சை செய்ய வேண்டுமென்று கப்பல் டாக்டர் கூறியிருந்தார். ஆனால் அப்போது நான் மண் பரிகார முறையில் அதிக நம்பிக்கை வைத்திருந்தேன். என் வார்த்தையில் நம்பிக்கையுள்ள என் கட்சிக் காரர்களையும் மண், நீர் ஆகிய வற்றின் பரிகார முறைகளைச் செய்து பார்க்கும்படி வற்புறுத்தியிருந்தேன்.

ஆகையால் அப்போது நான் ராமதாஸுக்கு என்ன செய்யவேண்டும்? அவனோ எட்டுவயதுச் சிறுவனாக இருந்தான். நான் அவனுடைய காயத்தைச் சிகிச்சை செய்யலாமா என்று கேட்டேன். அவனுடைய அந்தச் சிறுவயதில் எம்முறை சிலாக்கியமானதென்னும் முடிவுக்கு வரக்கூடாதவனாயிருந்தபடியாலும், என்னுடைய குடும்ப முறையை அவன் அறிவானதலாலும் அவனை என்னிடம் ஒப்புவிக்க அவன் சந்தோஷத்துடனேயே சம்மதப்பட்டான். ஆனால் நான் அச்சத்துடனும் நடுக்கத்துடனும் அவன் கையின் கட்டை அவிழ்த்து அந்தக் காயத்தைச் சுத்தஞ்செய்து, சுத்தமான மண்ணின் மாவை அக்காயத்தின் மீது தூவிவிட்டு அதைக் கட்டிவிட்டேன். இவ்வாறே தினந்தோறும் சுமார் ஒரு மாதம்வரை சிகிச்சை செய்து வந்ததில் காயம் பூர்த்தியாக ஆறிவிட்டது. கப்பல் டாக்டர் எந்தக் கால அளவுக்குள் அது ஆறிவிடுமென்று கூறினாரோ அதைவிட அதிகமான காலத்தை எடுத்துக்கொள்ளாமலே அப்புண் ஆறிவிட்டது.

இதுவும், இதைப்போன்ற இன்னும் பல அனுபவங்களும் குடும்பப்பரிகார முறைகளில் எனக்கிருந்த நம்பிக்கையை இன்னும் பலப்படுத்திவிட்டன. ஆகவே, நான் அதிகமான நம்பிக்கையுடன் அம் முறைகளைக் கையாள ஆரம்பித்தேன். நான் காயங்கள், ஜுரம், அஜீரணம் முதலிய நோய்களுக்கும் மண், நீர், பட்டினி முதலிய முறைகளின் பரிகாரங்களையே அதிகமாக அனுஷ்டிக்க ஆரம்பித்து என் அனுபவத்தை விசாலப் படுத்தினேன். ஆனால் தென்னாப்பிரிக்காவில் இருந்த போது எனக்கு இவ்விஷயங்களில் இருந்த நம்பிக்கை இப்போது இல்லை. பிற்பட்ட அனுபவங்களும் இப்படிப்பட்ட முறைகளில் ஆபத்துகளும் இருக்கின்றனவென்பதையும் மெய்ப்பித்துக் காட்டியிருக்கின்றன.

எனவே, அந்த அனுபவங்களை இங்கே குறிப்பிட்டிருப்பதால் அவைகளின் வெற்றியைப் பின்பற்ற வேண்டுமென்பது பொருளன்று. எந்த ஒரு அனுபவத்திலும் பூர்த்தியான வெற்றியைப் பெற்றதாக என்னால் உறுதிகூற முடியாது. டாக்டர்களும் தங்களுடைய அனுபவங்களைப்பற்றியும் அவ்வாறு உறுதி கூறமுடியாதென்றே நினைக்கின்றேன். இதனால் என் அபிப்பிராயம் யாதெனின், எவரொருவர் நவீன அனுபவத்தை வழக்கத்தில் கொண்டுவர விரும்புகிறாரோ அவர், முதன் முதலில் தாமே அனுபவித்துப் பார்க்க வேண்டுமென்பதாகும். அது தான் உண்மையை விரைவில் கண்டுபிடிக்க வழிகாட்டுகின்றது. மேலும் இறைவனும் கண்ணிய அனுபவவாதியையே காப்பாற்றுகின்றான். ஐரோப்பியர்களுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொள்வதென்னும் அனுபவத்தில் காணப்படும் அபாயங்களும், இயற்கை முறைப் பரிகாரங்களில் காணப்படும் அபாயங்களைப் போலவே இருந்தன. ஆயினும் அத்தகைய சம்பந்தங்களை அபிவிருத்திசெய்து கொள்வதில், அந்த அபாயங்களை நான் கவனிக்கவில்லை.

நான் போலக்கை என்னுடன் வந்து தங்கும்படி கேட்டுக் கொண்டேன். நாங்களிருவரும் உதிர சம்பந்தமுள்ள சகோதரர்களேபோல் ஒருமனப்பட்டு வாழ ஆரம்பித்தோம். அவரும், ஸ்ரீமதி போலக்கும் சில ஆண்டுகளாக ஒன்றாக நேசித்து வந்த போதிலும் கலியாணம் மட்டும் நீண்ட நாளைக்கு ஒதுக்கிவைக்கப் பட்டிருந்தது. அவர் இல்வாழ்க்கையில் நுழைவதற்கு முன்னர் செல்வத்தைச் சேர்த்துவைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினாரென்று நான் நினைக்கிறேன். என்னைக் காட்டிலும் அவர் ரஸ்கினைப்பற்றி அதிகம் அறிந்தவராக இருந்தார். ஆயினும் ரஸ்கினுடைய உபதேசங்களை அவருடைய அனுஷ்டானத்தில் உடனே பின்பற்றமுடியாமல் அவரைத் தடுத்தவை, அவரைச் சுற்றியிருந்த மேல்நாட்டுச் சந்தர்ப்பங்களாகும். ஆனால் நான் அவருடன் வாதம் செய்து, "தாங்கள் மனமாற ரஸ்கினுடைய உபதேசங்களை விரும்பும்போது பணத்தின் யோசனைக்காக விவாகத்தைத் தள்ளி வைப்பது சரியன்று. மணத்துக்கு வறுமை தடையாயிருக்குமாயின், ஏழைகள் எப்போதுமே விவாகம் செய்து கொள்ள முடியாது. மேலும், இப்போது தாங்கள் என்னுடன் வசித்து வருவதால் வீட்டுச் செல்வுக்காகத் தாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஆதலின் தாங்கள் விரைவில் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றே நான் நினைக்கிறேன்" என்று கூறினேன். நான் முன்பு ஒரு அத்தியா

(இதன் தொடர்பு ஆ. பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(அ பக்கத்தின் தொடர்பு)

யத்தில் கூறியதேபோல் எந்த ஒரு விஷயத்தையும் ஸ்ரீ போலக்குடன் இருமுறை விவாதிக்கவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டதில்லை. அவர் என்னுடைய வாதத்தின் வேகத்தைக் கண்டு சந்தோஷப்பட்டதுடன், உடனே அப்போது இங்கிலாந்திலிருந்த ஸ்ரீமதி போலக்குடன் கடிதப் போக்குவரத்து நடத்தத் தலைப்பட்டார். அந்த அம்மையும் இந்த யோசனையைச் சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டு சில மாதங்களுக்குள் ஜோஹன்ஸ் பர்க் வந்து சேர்ந்தார். கலியாணத்துக்கென்று எவ்வித பிரத்யேகச் செலவையும் செய்யவேண்டுமென்னும் எண்ணம் இருக்கவில்லை. மேலும் புதிய உடையும் அவசியமென்று கருதப்படவில்லை. அவர்களிருவரையும் பிணைப்பதற்கு எவ்வித மதச்சடங்கும் அவசியமாக இருக்கவில்லை. பிறப்பினால் ஸ்ரீ. போலக் கிறிஸ்தவராகவும், ஸ்ரீமதி போலக் யூதராகவும் இருந்தனர். அவர்களுடைய பொதுவான மதம் நீதியாகவே இருந்தது.

இந்த விவாக சமயத்தில் நடந்த ஒரு விநோத சம்பவத்தைப் பற்றி நான் இங்கு குறிப்பிடலாமென்றே நினைக்கிறேன். திரான்ஸ்வாலிலுள்ள ஐரோப்பிய விவாகங்களின் ரிஜிஸ்ட்ரார் கறுப்பர்களிடையேயும் ஆசியா ஜாதியார்களிடையேயும் நடைபெறும் கலியாணங்களைப் பதிவு செய்ய மாட்டார். இந்தக்கலியாணத்தில் நான்தான் புரோகிதனாக இருந்தேன். எங்களுக்கு ஒரு ஐரோப்பிய நண்பர் அகப்பட மாட்டார் என்னும் காரணத்துக்காக நான் புரோகிதனாக இருக்கவில்லை. ஆனால் ஸ்ரீ. போலக் அந்த வேலையை நானே செய்ய வேண்டுமென்று விரும்பினார். எனவே நாங்கள் மூவரும் ரிஜிஸ்ட்ராரிடம் சென்றோம். நான் புரோகிதனாக இருக்கும் விவாகத்தின் தம்பதிகளிருவரும் வெள்ளையர்களாக இருப்பார்களென்று அவர் எவ்வாறு நிச்சயமாக நம்புவார்? ஆதலால் அவர் பதிவு செய்வதை ஒத்திப்போட்டு விட்டார். மறுநாள் கிறிஸ்துமஸ் தினமாக இருந்தது. அத்தகைய சிறந்த நாளென்று விவாகம் செய்யாமல் இன்னும் ஒத்திப்போடுவதென்பது பொறுக்கமுடியாத காரியமாயிருந்தது. பத்திரப் பதிவு இலாகாவின் தலைவராயிருந்த பிரதம மாஜிஸ்ட்ரேட் எனக்குத் தெரிந்தவராயிருந்தார். எனவே நான் அந்தத் தம்பதிகளுடன் அவரிடம் சென்றேன். அவர் சிரித்து விட்டு ரிஜிஸ்ட்ராருக்குக் கொடுக்கும்படி ஒரு சிறு கடிதம் கொடுத்தார். இதை எடுத்துக் கொண்டு அவரிடம் சென்றதும் அவர் முறைப்படி விவாகத்தைப் பதிவு செய்தார்.

அதுவரை என்னுடன் வசித்து வந்த ஐரோப்பியர்கள் எனக்கு முன்னமே தெரிந்தவர்களாகவே இருந்தார்கள். ஆனால் அப்போது எங்களுக்கு முற்றும் புதியவரான ஆங்கிலமாது எங்கள் குடும்பத்தில் நுழைந்தார். அந்தப் புதிய தம்பதிகளுடன் நாங்கள் எவ்வித வித்தியாசமும் பாராட்டியதாக எனக்கு ஞாபகமில்லை. ஆனால் ஸ்ரீமதி போலக்கும் என் மனைவியும் சிற் சில சமயங்களில் அதிருப்திகரமாக நடந்து கொண்டிருக்கலாம். அதுவும் ஒரே இனத்தைச் சேர்ந்த இதர குடும்பங்களில் நடைபெறும் சம்பவங்களுடன் ஒப்பிடும்போது ஒன்றுமில்லை யென்றே கூறலாம். என் குடும்பம் பல இனத்தாரும், பல சுபாவத்தாரும் தாராளமாகக் கலந்து கொள்ளக்கூடிய பல திறப்பட்ட இனங்களைச் சேர்ந்த குடும்பமாக இருந்த தென்பதை ஞாபகத்திலிருத்திக் கொள்ளவேண்டும். எனவே என் குடும்பத்தைப்பற்றி நினைக்கும்போதே ஒரே இனத்தைச் சேர்ந்த குடும்பத்துக்கும், பல திறப்பட்ட இனத்தார் கூடியுள்ள குடும்பத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசங்கள் வெறும் மனக்கற்பித மென்றே தெரிந்து கொள்ளலாம். நாங்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

நான் இதே அத்தியாயத்தில் ஸ்ரீ. வெஸ்ட்டின் கலியாணத்தைப் பற்றியும் விரிவாகக் கூறியிருக்கிறேன். அக்காலத்தில் பிரமசரியத்தைப்பற்றி என் அபிப்பிராயம் அவ்வளவு உறுதியானதாக இருக்கவில்லை. எனவே என்னுடைய பிரமசரிய நண்பர்களை யெல்லாம் கலியாணம் செய்து கொண்டவர்களாகச் செய்வதில் அதிக ஊக்கம் செலுத்தி வந்தேன். அந்த சமயத்தில்

## அரிய வுரைகள்.

ஹிந்து தர்மத்திலும் மற்றெந்த தர்மத்திலும் மனிதனுக்குள் உயர்வு தாழ்வு இல்லை யென்று தான் தெரிகிறது. நமது மனதில் சமத்துவத்தை நினைக்கக்கூட பின் வாங்கினால் நாம் சுயராஜ்யத்தை எவ்வாறு அடைவது? அது கனவாகத்தான் முடியும்.

—மகாத்மா காந்தியடிகள்.

காங்கிரஸ் காரர்களில்கூட சிலர் தீண்டாமையை ஒழிக்க முடியாதென நம்புகின்றனரெனச் சொல்லப்படுகிறது அது உண்மையாயின் அப்பேர்ப்பட்டவர்கள் தங்கள் அங்கத்தினர் பதவியை ராஜினமா செய்வது நலம். எப்பொழுது சுயராஜ்யத்தில் அபேக்ஷை கொள்கிறோமோ அப்போதே தீண்டாமை விலக்கையும் அவசியம் ஒப்புக்கொண்டேயாகவேண்டும்.

—டீ யார்.

ஆங்கிலேயரும் சரி, அமெரிக்கரும் சரி, இந்தியாவில் பல கோடி ஜனங்கள் சரியான உணவின்றி வருந்தி வருவதை உணர்வதேயில்லை. பெற்றோரின் பசிக்கொடுமையே குழந்தைகளின் ஒழுக்கஹீனத்திற்கு முக்கிய காரணம்.

—ஸ்ரீமதி அன்னி பெசண்டு அம்மையார்.

அமெரிக்காவிலுள்ள தீமைகளை நான் அறிந்திருந்த போதிலும் அவைகளைப் பற்றியே கூறாமல் அதனிடமுள்ள மேன்மைகளை மாத்திரம் எடுத்துக் கூறி ஜனங்களை உற்சாகப்படுத்தியிருக்கிறேன்.

டீயார்.

ஸ்ரீ வெஸ்ட் தம்முடைய பெற்றோர்களைப் பார்ப்பதற்காக லௌத் என்னுமிடத்துக்குப் பிரயாணம் சென்றார். அப்போது நான் அவரைப்பார்த்து திரும்பி வரும்போது கூடுமானால் விவாகம் செய்து கொண்டு வரும்படி கேட்டுக்கொண்டேன். போனிக்ஸ் எங்களுக்குப் பொதுவான இடமாக இருந்தது. நாங்களனைவரும் விவசாயிகளாகப் போகிற தென்று தீர்மானித்தபடியால் எங்களுக்கு விவாகத்தைப்பற்றிச் சிறிதும் அச்சமிருக்கவில்லை. ஸ்ரீ வெஸ்ட்டும், லீசெஸ்டரைச் சேர்ந்த அழகிய பெண்மணியான ஸ்ரீமதி வெஸ்ட்டுடன் திரும்பிவந்தார். அம்மாது லீசெஸ்டர் செருப்புத் தொழிற் சாலையில் செருப்பு தைக்கும் ஒருவருடைய குடும்பத்திலிருந்து வந்தவர். எனவே அம்மாதுக்கும் அத்தொழிலில் சிறிது பழக்கமிருந்தது. அம்மாதை நான் அழகானவரென்று கூறியதற்குக்காரணம் அவருடைய ஒழுக்கம் என்னைக் கவர்ந்து விட்டதேயாகும். உண்மை அழகு இருதய பரிசுத்தத்தில் தான் பொதிந்து கிடக்கின்றது. ஸ்ரீ. வெஸ்ட்டுடன் அவருடைய மாமியாரும் வந்திருந்தார். அக்கிழமாது இன்னும் பிழைத்திருக்கிறார். அவருடைய உழைப்பினாலும் உற்சாகத்தினாலும் எங்களை யெல்லாம் வெட்கப்படும்படி செய்துவிட்டார்.

இவ்வாறு ஐரோப்பிய நண்பர்களை யெல்லாம் விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தியதே போல் என் இந்திய நண்பர்களை அவர்களுடைய குடும்பங்களைத் தாய் நாட்டினின்றும் வரவழைக்கும்படி உற்சாகப்படுத்தினேன். இவ்வாறு போனிக்ஸ் ஒரு சிறு கிராமமாக விருத்தியடைந்து விட்டது. அரை டஜன் குடும்பங்கள்வரை அங்கே வந்து தங்கி அபிவிருத்தியடையவும் ஆரம்பமாயிற்று.


## இனும்! இனும்!!

படுக்கை யறையை அலங்கரிக்கும் பிரெஞ்சு லேடிகளின் அழகிய பெட்ரும் போட்டோ படங்கள் 50 எங்களுடைய உயர்ந்த 14 கே. டி. பௌன்டன் பேனு வாங்குவோர் ஒவ்வொருவருக்கும் இனும் கொடுக்கப்படும். உடனே ஆர்டர் செய்யுங்கள். விலை ரூபாய் 1—8—0. விலாசம்:—

மில்லர் வாச் கம்பெனி,
38. பரமானந்த முதலி தெரு,
ஜியார்ஜ் டவுன், மதறாஸ்.


# மாயவாழ்வு.

ஸ்ரீ ஏ. கே. அண்ணாமலை எழுதியது.

## 1-வது அத்தியாயம்.

மழையோ ஓய்ந்தது. இருளோ சூழ்ந்தது. குளிரோ மிகுந்தது. மின்னல் பளீரென வெட்டுகிறது. மணியும் கணீரென ஒன்றடித்தது. மணி ஏழரையாயிற்று. அவ்வேளை வாலிபனொருவன் மதுபானமெனுங் குதிரையிலேறி தன்னிரு நண்பர்களோடு பல விஷயங்களைப் பல பாஷைகளில் பல எண்ணங்களோடு கால் கைகளை வீசி மமதையாய் வழியில் பேசிக்கொண்டு சென்றான். இவர்கள் புறவிருளால் பிறர்க்கு இன்னாரென இனந்தெரியாவாறு காக்கப்பெற்றுச் சென்றதானது இவர்கள் மனவிருளால் அகத் தூய்மையின்றி அறவழிதப்பியவர்கள் என்பதைத் தெள்ளிதின் தெரியப்படுத்திற்று. நமது வாலிபனுக்கு ஏற்கனவேயுள்ள இரு நண்பர்களோடு இருளும் ஒரு சிநேகராயிற்று. இருளின் விரோதியான மின்னலோ, நான் சத்தியந்தவறாது தீயோர்களைக் காட்டிக் கொடுப்பேனென பளீர் பளீரென மின்னிற்று. நமது வாலிபனுக்கு மின்னலெனும் பகைவனும் பின்தொடர்ந்தான். வாலிபன் நவரத்தினங்களிழைத்த ஆபரணங்களால் நிறைந்திருந்தான். பட்டுப் பட்டாடைகளையும் அணிந்திருந்தான். ஜோப்பில் பவுன்களும் ரூபாய்களும் விளையாடிக் கொண்டிருந்தன. அக்காரிருளில் இவர்கள் சாரங்கமாகச் சென்றதை நோக்க ஏதோ ஒரு குறிப்பிட்ட விடம் நோக்கிச் செல்வதாயிருந்தது. அவ்விதமே மூவரும் ஒரு வீட்டையடைந்தனர். அங்கே கிழவியும் குமரியுமாக இருவர் ஊர் வம்புபேசி அவுட்டுச் சிரிப்பில் சிரத்தை கொண்டிருந்தார்கள். வாசலிலுட்கார்ந்தவ்வளவு மினுக்கு மினுக்குவோர்களை நாம் சொல்லாமலே வாசகர்கள் தாசிகளெனத் தெரிந்திருப்பார்கள். நமது வாலிப மைனரைக் கண்டதும் அவ்வேசி கமலாம்பாள் முகமலர்ந்து கனத்த சிரிப்பாகச் சிரித்தாள்; நல்வரவேற்றாள். எண்ணவும், அளக்கவும், நிறுக்கவும் முடியாத முத்தங்கள் அளித்தாள். மதுவால் மதிமருண்டு மையலால் மயக்குண்ட மன்னனின் ஜோப்பில் கைபோட்டு முழுவதும் எடுத்து விட்டாள். தாய்க்கிழவி உபசாரம் செய்வதுபோல பின்னிருந்து பணங்களை யெல்லாம் வாங்கி மைனரோடுவந்த இருவர்க்கும் ரகஸிய ஒப்பந்தப்படி சிறிது கொடுத்தாள். இருவரும் அகப்பட்டதைச் சுற்றிக்கொண்டு மைனரிடம் விடைபெற்றேகினர். மைனர்க்கு குடியின்போதை உச்சிக்கேறி விட்டது. எங்கிருக்கின்றோம், ஏது செய்கின்றோமென்ற உணர்விழந்து உழலும் மைனர் தானிந்திர லோகத்திலிருப்பதாக நினைத்துக்கொண்டார். இன்பக்கனவுகள் கண்டார். சிறிது நேரத்தில் தனது தேகம் சிலிர்க்கவே, தான் கமலாம்பாள் மடி மீதிருப்பது எவ்வளவு குளிர்ச்சியாயிருக்கிறதெனப் புலம்பினார். உண்மையில் அவ்வித மொன்றுமில்லை. வெறும் நினைப்புத் தானேயன்றி வேறல்ல. சிறிது நேரத்திற்குப் பின் உணர்வு வந்தது. சேற்றில் கிடப்பதாக உணர்ந்தார். ஆபரணங்களையும் பணங்களையும்காணோம். உடனே எழுந்து தன்னை சேற்றில் தூக்கிப்போட ஏற்பாடு செய்தனளே என்ற ரோஷத்தால் கமலாம்பாள் வீட்டுக்கதவை, தாசித்துக் கொண்டே காலால் உதைத்தார். உள்ளே கூ! கூ! கள்ளன்!! திருடனென கத்தினார்கள். முன்னாலேயே கமலாம்பாள் தயார்செய்து வைத்திருந்த போலீஸ் ஜெவான் நம்மைனரை விலங்கிட்டுக்கொண்டு போனான். ஜெயில் நமது மைனரை நல்வரவேற்றுக் கொண்டது.

## 2-வது அத்தியாயம்.

கல்வியில் குதிரைக் கொம்பானாலும் செல்வத்தில் சீமான். அழகு ஆகாயத் தாமரையானாலும் ஆடம்பரத்தில் குறைவில்லை. புத்தியில் பூஜ்யமானாலும் வீண்பேச்சில் இணையற்றவர். சாந்தத்தில் பள்ளத்தாக்கானாலும் கோபத்தில் இமயகிரியே. தர்மமென்று கேட்டால் என்ன நிறம்? எங்கே விற்கிறது? சுமார் கனம் எத்தனைபாரமிருக்குமெனக் கேட்பார். இவ்வளவு அம்சமும் ஒருருவாயமைந்தவ தரித்த மணிநாயகப் பிரபுக்கு தகப்பனார் தேடிய செல்வமில்லாவிட்டால் பணமென்றால் கறுப்பா, சிவப்பாவெனக் கேட்கக் கூடிய நிலையிலிருந்திருப்பார். இவருக்குப்பூர்வ புண்ணியத்தால் ஆண்மகவொன்றுண்டு. இப்பையனுக்கு மதிசுந்தரம் என்பது திருநாமம். பெயருக்குத்தகுந்த அறிவும் அழகும் மல்கியவன். இவனது பதினெட்டாம் பிராயத்தில் மணிநாயகப்பிரபு மண்ணுலகை விட்டு விண்ணுலகேகினார்.

பிதாபிரிந்ததால் மதிசுந்தரன் வரவு செலவுகணக்கைக் கவனித்தான். கணக்கற்ற நிலங்களும் பணங்களும் நிறைந்திருப்பதாக அறிந்தான். செல்வச் சீமான் வீட்டுப் பிள்ளையான தினாலும் கல்விக்கடலில் சில நாள் நீந்தியவனாதலினாலும் தன்காரியங்களை சரியாய் கவனித்தே வந்தான்.

அவ்வூரில் சுவர் நோட்டீஸ்கள் நக்ஷத்திரமயமாயின. துண்டுப் பிரசுரங்கள் மழைத்துளிகள்போல்மலிந்தன. நாடகங்களும் படக் காட்சிகளும் சர்க்கஸ்களும் பணத்தைப் பறித்து, நித்திரையைக் கெடுத்து நோய்களை கொடுத்துக் கொண்டும் வந்தன.

உள்ளே சாக்கில்லா விட்டாலும் வெளிமயக்கில் அநேகரை வசப்படுத்தலாம். இது நீடித்து நிற்காது. இப்படாடோப நோட்டீஸ் தடபுடல்களில் நமது மைனர் மதிசுந்தரப்பிரபு மயங்கி விதிதந்திரப் பிரபுவாய் மாறி விட்டார். காகூஷிகளிலிருந்து மைனருக்கு இனும் டிக்கட்டுகள் குவிந்தன. நமது மைனர் உணவை மறந்தாலும் இராகரக்ஷி காணமறக்கமாட்டார்.

அவ்வகையால் நமது மைனருக்கு நாடகத்திலுள்ள இருவர் நேசராயினர். நாடக நட்பினரிருவரும் இப்படிப்பட்ட ஆசாமி எப்போது தம் வலையில் சிக்குவானோ என்றுதான் எதிர்பார்த்திருந்தார்கள். முதலில் ஒசிப்பொடி, ஒசிச் சிகரட்டுக் கொடுத்து உற்சாகமூட்டி இன்பங்காட்டி தங்கள் சாமர்த்தியச் சுதி மீட்டி தங்கள் வழி கூட்டிக் கொண்டார்கள்.

மணிநாயகப்பிரபு இருக்கும் போதே சத்தியநாதனெனுமொரு மனிதன் சகல பொறுப்புடனும் வியாபாரம் முதலிய விஷயங்களை செவ்வனே நடத்தி வந்தான். நமது மைனரும் அவனையே நம்பி தனது வேலைக்கு பொறுப்பாக வைத்திருந்தார்.

நாடகம் அயலூர் சென்றதால் நண்பர்களோடு மைனரும் செல்லவேண்டி ஏற்பட்டது. தாயார் சொல் மைனரிடம் பலிக்கவில்லை. பெற்ற அன்புறு அன்னையை பணிந்தகாலம் நீங்கி அவளை எதிர்த்து மீறுதலே நிகழ்காலவழக்கமாயிருக்க மைனர் விஷயத்திலோசொல்லவேண்டுவதின்று. நாடகத்தோடயலூர் சென்றார் மைனர். பல பாய்கள் விரிக்கப் பட்டிருந்த கொட்டகையில் பல......பாய்கள் தினமும் வந்து நடிப்பார்கள். விபசாரமும் குடியுமில்லாத நாடகம் தற்காலத்தில் கிடைப்பது அபூர்வம். எந்நோக்கோடு பண்டையில் நாடகமேற்பட்டதோ அதற்கு நேர்விரோதமாகவே இக்கால நவீன நாகரீகத்தில் நடைபெறுகிறது. பாமரரை—கல்வி கற்காதவர்களை—சோம்பேறிகளை நாடகமெனும் வேடிக்கை மூலமாய் பழத்தோடு மருந்து சேர்த்து குழந்தைகள் நோயைத் தீர்ப்பது போல நடித்து அவர்கள் மனதை கவர்ந்து வசீகரித்து திருத்தி நல்லோர்களாக்கி பக்தியை விதைக்கவே முன்னால் நமதான்றோர்களா லேற்படுத்தப்பட்டது. இக்காலத்தில் பக்திக்குப் பதிலாக தீமையே விதைக்கப் படுகிறது.

இருதீய நட்பாளர்களோடு மைனர் குடியில் கைதேர்ந்து விட்டாரென்பது ஆச்சரியமல்ல. மைனர் பிரபு தண்ணீர்க்குப்பதிலாக மதுவையே பானம் செய்துவந்தார். இதுகாறும் விவரித்து வந்த நமது கதாநாயக மைனரே ஒன்றாவது அத்தியாயத்தில் கூறிய வாலிபராவர். இருநாடக நண்பர்களே முன்னத்தியாயத்தில் கூறிய மைனரின் கேண்மையாளர்கள்.

(தொடரும்.)